நம்மால் முடியும்!

- தலைவர் கலைஞர்

நம்மால் முடியும்!

தலைவர் கலைஞர்

வெளியீடு:
தி.மு.க. இளைஞர் அணி,
"அன்பகம்"
614/508, அண்ணா சாலை,
சென்னை – 600 018.

முதற்பதிப்பு : செப்டம்பர் 2013.

விலை : ரூ. 10/-

38036
கி328.5411
கிணை

அச்சிட்டோர் : அஸ்வின் பிரிண்டிங் ஏஜென்சி, சென்னை-14.

அ.தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-113
தகவல் அறிவாலயம்

ஒகேனக்கல் திட்டமும், முத்தியால்பேட்டை காவல் நிலையமும்!

உடன்பிறப்பே,

ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தை "வீடியோ கான்பரன்சிங்" மூலமாக முதல் அமைச்சர் 29-5-2013 அன்று செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலே இருந்தவாறு திறந்து வைத்தார். அப்போது அவர் பேசிய நேரத்தில், கழகத்தின் மீது வழக்கம் போல் பல குற்றச்சாட்டுகளைக் கூறி, நான் அவற்றுக்கெல்லாம் 31-5-2013 அன்று விளக்கமாகப் பதில் அளித்திருந்தேன்.

அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான் ஒகேனக்கல் திட்டம் முடுக்கி விடப்பட்டதாக முதலமைச்சர் ஜெயலலிதா பேசினார். இந்தத் திட்டம் யார் ஆட்சிக் காலத்தில் விரைந்து திட்டம் தீட்டப்பட்டு, முடுக்கி விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது என்பதைப் பற்றியும், கழக ஆட்சியில் இந்தத்துறையின் அமைச்சராக இருந்த தளபதி மு.க.ஸ்டாலின் எந்த அளவிற்கு இந்தத் திட்டத்தை ஆர்வத்தோடு விரைவுபடுத்தினார் என்பதைப் பற்றியும், இந்தத் திட்டத்திற்காகக் கால அட்டவணை ஒன்றே தயாரிக்கப்பட்டு, அதன் அடிப்படையில்தான்

2012ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் திட்டம் முடியக்கூடிய அளவிற்கு கழக ஆட்சியில் முறைப் படுத்தப்பட்டு, அவ்வாறே பணிகள் நடைபெற்று வந்ததைப் பற்றியும் நான் தெளிவாகத் தெரிவித்திருந்தேன்.

ஒகேனக்கல் திட்டப் பணிகள் முழுமை பெறாமல் என்ன காரணத்தாலோ அவசர அவசரமாக இந்த ஆட்சியில் முதலமைச்சரைக் கொண்டு அதனைத் திறந்து வைத்ததைப் பற்றி நான் மாத்திரம் கூறவில்லை.

ஒகேனக்கல் திட்டப் பணிகள் முழுமை பெறவில்லை, பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதற்கு அடையாளமாக "தினமலர்" நாளேடு வெளியிட்டிருந்த புகைப்படத்தையே எடுத்துக் காட்டி, அவசர அவசரமாக இந்தத் திட்டம் தொடங்கி வைக்கப்படுவது ஏன் என்று நான் கேட்டிருந்த கேள்விக்கு முதலமைச்சர் ஏனோ இதுவரை பதிலே அளிக்கவில்லை.

நான் கூறியது உண்மை என்பதை நிரூபிக்கத்தக்க வகையில், "இந்து" நாளேட்டிலேயே "**People in many rural areas were upset that the water did not reach them**" (கிராமப்புறங்கள் பலவற்றுக்கு குடிநீர் சென்று சேராததால், மக்கள் பெரிதும் ஏமாற்றமடைந்தனர்) என்று வெளியிடப்பட்டிருந்தது.

12-8-2013 தேதிய "தினமலர்" நாளேட்டில் வெளிவந்த செய்தியில், "தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட

மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கத் துவங்கப்பட்ட ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம், முழுமை பெறாத நிலையில், கிராமப் பகுதிகளில், மீண்டும் "புளோரைடு" கலந்த நீரே, குடிநீராக விநியோகிக்கப்படுகிறது. தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நிலத்தடி நீரில், "புளோரைடு" அளவு, நிர்ணயிக்கப்பட்ட அளவைவிடக் கூடுதலாக உள்ளது. இந்த நீரைச் சுத்திகரிக்க வழி இல்லாததால், குடிநீராக பருகுவோருக்கு எலும்பு, நரம்பு சம்பந்தமான நோய்களும், பல் கறைபடிதல் உள்ளிட்ட நோய்த் தாக்கமும் அதிகரித்தது. இதையடுத்து, இரு மாவட்டத்துக்கும் பாதுகாப்பான குடிநீர் வழங்க, 2008ஆம் ஆண்டு (திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்) ஜப்பான் நிதி உதவியுடன், 1,928 கோடி ரூபாய் மதிப்பில் ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம் கொண்டு வரப்பட்டது. **இத்திட்டப் பணி முழுமை பெறாத நிலையில், சில மாதங்களுக்கு முன், சென்னையில் இருந்து வீடியோ கான்பரன்சிங் மூலமாக முதல்வர் ஜெயலலிதா துவக்கி வைத்தார். கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை, ஒசூர், தர்மபுரி மாவட்டம், அரூர், பாப்பிரெட்டிப்பட்டி தாலுகா பகுதிகளில் திட்டப் பணிகள் ஆரம்பக் கட்டத்தில் உள்ள நிலையில், திட்டத்தை முதல்வர் ஜெயலலிதா துவக்கி வைத்தது குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்தில் 15 முதல் 20 சதவிகிதப் பணிகள் முடிக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளன.** இத்திட்டத்தின் மூலம், தர்மபுரி, ஒசூர், கிருஷ்ணகிரி ஆகிய நகராட்சிப் பகுதிகளுக்கு, குடிநீர்

விநியோகம் செய்யப்பட்ட போதும், நகராட்சிப் பகுதியில், முழு அளவில் குடிநீர் வழங்க முடியாத நிலை உள்ளது. ஒகேனக்கல் குடிநீரை, முதலில் திட்டமிட்டபடி முழு அளவில் இரு மாவட்ட மக்களுக்கும் வழங்கவில்லை. இதனால், "புளோரைடு" கலந்த நீரையே, மக்கள் குடிநீராகப் பயன்படுத்தும் நிலை தொடர் கிறது. "போர்வெல்" தண்ணீர் மற்றும் ஒகேனக்கல் தண்ணீர் இரண்டும் கலந்தே கிராமப் பகுதிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது" என்று எழுதப் பட்டிருந்தது.

ஆனால் நான் எழுதியதற்கோ, "தினமலர்", "இந்து" ஆகிய நாளேடுகள் எழுதியதற்கோ ஆளும் தரப்பிலிருந்து எந்தவிதமான பதிலும் வரவில்லை. முதலமைச்சர் ஜெயலலிதா அவசர அவசரமாகத் திறந்து வைத்த, அந்தத் திட்டம் எந்த நிலையிலே உள்ளது என்பதைப் பற்றி தற்போது கடந்த மாதக் கடைசியில் 24-8-2013 தேதிய "இந்து" நாளேடு, புகைப்படத்தோடு விரிவாகச் செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியின் சுருக்கம் வருமாறு :-

"கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்ட மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக நீண்ட நாட்களுக்குப் பிறகு 1,928 கோடி ரூபாய் திட்ட மதிப்பில், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் துவக்கப்பட்டு, இரண்டு மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டது. இந்தத் திட்டத்தின்கீழ்

பயன்பெற வேண்டிய ஊரகப் பகுதிகளின் மக்கள் இன்னமும் அந்தத் திட்டத்தின் பலனை அனுபவிக்க முடியவில்லை என்கிற நிலைதான் இருக்கிறது. அதிகாரிகளைக் கேட்டால் நிலுவையில் இருக்கும் குழாய்ப் பதிப்புப் பணிகள்தான் காரணம் என்கிறார்கள். நிலத்தடி நீரில் அதிக அளவிலான "புளோரைடு" இருப்பதன் காரணமாக இம்மாவட்ட மக்கள் பலன் அடைய வேண்டும் என்பதன் அடிப்படையில், அன்றாடம் 16 கோடி லிட்டர் தண்ணீர் காவிரி ஆற்றிலிருந்து பெறக்கூடிய வகையில் இந்தத் திட்டம் துவக்கப்பட்டது. ஆனால் காவிரிக் கரை யோரம் உள்ள மக்கள் இன்னமும் 3 ரூபாய்க்கும், 4 ரூபாய்க்கும் ஒருகுடம் நீரை விலைக்கு வாங்கிக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஏறத்தாழ 33 லட்சம் மக்களை உள்ளடக்கிய கிருஷ்ணகிரி, தர்மபுரி மற்றும் ஓசூர் ஆகிய நகர மன்றங்களும், 15 நகரப் பஞ்சாயத்துக்களும் இந்தத் திட்டத்தின் மூலம் பயனடையும் வண்ணம் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இதில் பாதி அளவுக்கு என்று சொல்லத்தக்க வகையில், 6,755 ஊரகக் குடியிருப்புகள் குடிநீர் பெற முடியாத பரிதாப நிலைதான் உள்ளது."

இவ்வாறு எழுதியுள்ள "இந்து" நாளிதழின் செய்தியாளர், அந்தப் பகுதியிலே உள்ள ஒரு சிலரைப் பேட்டி கண்டு அதையும் வெளியிட்டிருக்கிறார்.

பெண்ணாகரம் தாலுகா, நாகமறைப் பகுதியில் ஆற்றின் கரையோரம் தின்பண்டக் கடை வைத்துக்

கொண்டிருக்கும் கே.சின்னப்பொண்ணு என்கிற விதவைப் பெண், "காவிரி என்னமோ கரைபுரண்டுதான் ஓடிக் கொண்டிருக்கிறது. ஆனால் எங்கள் கிராமத்தில் உள்ள மக்களோ குடிநீர் இன்றி தவித்துக் கொண்டிருக்கிறார்கள். காரணம் முறையாக தண்ணீர்க் குழாய் பதிக்காததுதான்" என்று சொல்லியிருக்கிறார்.

எரியூர் கிராமத்தைச் சேர்ந்த ஆர்.சின்னம்மா, எம்.மாலா ஆகியோர், "இந்தத் திட்டத்தின்கீழ் இன்னமும் குழாய்கள்கூடப் பதிக்கவில்லை" என்று தெரிவித் திருக்கிறார்கள்.

கடந்த ஆறு மாதங்களாக வண்டியில் நிலத்தடி தண்ணீர் எடுத்து வந்து விற்பனை செய்து வரும் ஏ.அன்பழகன் என்பவர், "தனியார் ஒருவரிடம் 1000 லிட்டர் நிலத்தடி நீரை 50 ரூபாய்க்கு வாங்கி வந்து விற்பனை செய்து வருகிறேன்" என்று கூறியிருக்கிறார்.

மேலும் சிலருடைய பேட்டியையும் "இந்து" வெளி யிட்டிருக்கிறது. தி.மு.கழக ஆட்சியில் பெரிதும் பாடுபட்டு, தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட நல்ல குடிநீர் வழங்குவதற்காகத் தொடங்கப்பட்ட திட்டத்தை ஏதோ தாங்கள்தான் நிறைவேற்றினோம் என்பதைப் போலக் காட்டிக் கொள்வதற்காகத் திட்டம் முடிவடையாத நிலையிலேயே அவசர கதியில் அரைகுறையாக ஒகேனக்கல் திட்டம்

தொடங்கப்பட்டது. அதைத்தான் அந்தத் திட்டம் தொடங்கப் பட்ட நேரத்திலேயே நான் விளக்கியிருந்தேன்.

முதலமைச்சர் ஜெயலலிதாவால் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் தொடங்கப்பட்டு மூன்று மாதம் ஆகிறது. ஆனால் கிருஷ்ணகிரி மாவட்டம் முழுவதும் சுமார் 90 சதவிகித இடங்களுக்கு அ.தி.மு.க. அரசால் இன்னும் குடிநீர் வழங்க முடியவில்லை. குறிப்பாக கிருஷ்ணகிரி, ஓசூர் நகராட்சிப் பகுதிகளில் வாரத்திற்கு ஒருமுறை மட்டுமே வழங்கப்படும் தண்ணீரும் பழைய நீர்த்தேக்கத் தொட்டிகள், பழைய குழாய்கள் மூலம் "ப்ளோரைடு" கலந்த நீரே வினியோகிக்கப்பட்டு வருகிறதாம். அந்த மாவட்டங்கள் முழுவதும் பல்வேறு இடங் களில் தண்ணீர்ப் பிரச்சினை தலைவிரித்தாடி, தாய்மார்கள் காலிக் குடங்களோடு சாலைக்கு வந்து போராட்டம் நடத்துகிறார்கள்.

கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்ட மக்களுக்கு முழுமையாக ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத் தண்ணீரை வழங்கக்கோரி, அந்த மாவட்டம் முழுவதும் உள்ள அனைத்து ஒன்றியங்களிலும், கிருஷ்ணகிரி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கடந்த 29-8-2013 அன்று ஆர்ப்பாட்டம் நடத்தத் திட்டமிட்டு, அதற்குக் காவல் துறையினரிடம் அனுமதி கோரி பத்து நாட்களுக்கு முன்பே மனு தரப்பட்டது. ஆர்ப்பாட்டம் குறித்து

செய்தித்தாள்களிலும், ஊடகங்களிலும் இதுபற்றிய செய்தியும் வெளியிடப்பட்டது.

ஆனால் போராட்டத்திற்கு முதல் நாள் இரவு ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டதாக காவல்துறை அனைத்து ஒன்றியங்களிலும் நோட்டீஸ் ஒட்டியது. எனினும், அதையும் பொருட்படுத்தாமல், கழகத்தின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. பத்து இடங்களில் தாய்மார்கள் காலிக் குடங்களுடன் முழக்கமிட்டனர். மாவட்டம் முழுவதிலும் மாவட்டக் கழகச் செயலாளர் டி.செங்குட்டுவன் உட்பட பத்தாயிரம் பேர் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கைது செய்யப்பட்டனர். நான் குறிப்பிட்ட இந்த விவரங்களிலிருந்து ஒகேனக்கல் திட்டப் பணிகள் முடிவடையாமலேயே அவசர அவசரமாக முதல் அமைச்சர் ஜெயலலிதாவே இதனைத் தொடங்கி வைத்தார் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

எதிர்க்கட்சிகள் உண்மையான நிலையை எடுத்துக் கூறினாலும் அதை ஏற்பதில்லை. ஏடுகள் விளக்கி ஆதாரப்பூர்வமாகத் தெரிவித்தாலும் அதையும் கவனிப்பதில்லை. யார் என்ன செய்ய முடியும்? முழுமை அடையவில்லை என்றாலும் நாங்கள் தொடங்கி வைப்பது தான் திட்டம்; அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் இந்த நாட்டு மக்களின் தலைவிதி என்ற மனப்பான்மையோடு அ.தி.மு.க. ஆட்சி நடைபெறுகிறது

என்பதற்கான மற்றொரு சான்றுதான் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்!

தி.மு.கழக ஆட்சியில் திட்டமிடப்பட்ட திட்டங்கள் என்றால் அதற்கு மூடுவிழா நடத்தப் பார்ப்பதும், வேகமாக நடைபெறும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிக்கான பணிகளுக்குத் தடை போடுவதும், தவிர்க்க முடியாமல் ஒருசில திட்டங்கள் தொடங்கப்பட்டு விட்டால், அந்தத் திட்டத்தை இப்படி அரைகுறையாக நிறைவேற்றுவதும் இந்த அ.தி.மு.க. ஆட்சியில் தொடர்கதையாக நீண்டு கொண்டே போகிறது. முடிவு அடையாத திட்டங்களை அவசரப்பட்டு திறந்து வைத்ததற்கு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் உதாரணம் என்றால், முடிவடைந்த பணிகள் முதல் அமைச்சரின் தேதிக்காகக் காத்திருப்பதற்கும் உதாரணம் கூறுகிறேன்.

காவல் துறைக்கு இதைச் செய்தோம், அதைச் செய்தோம் என்று முதலமைச்சர் ஜெயலலிதா கூறிக் கொண்டிருக்கிறார். ஆனால் அவர்களது ஆட்சியில் சென்னை மாநகரில் முத்தியால் பேட்டை காவல் நிலையம் – உபயோகத்தில் இல்லாத – மாநகராட்சிப் பள்ளி ஒன்றிலே நடை பெறுவதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. கடந்த மூன்றாண்டு காலமாக முத்தியால்பேட்டை காவல் நிலையம் இந்தப் பள்ளியிலேதான் செயல்பட்டு வருகிறது. முத்தியால்பேட்டை காவல் நிலையத்திற்காக ஒரு புதிய

கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு விட்டது. ஆனால் அதனைத் திறந்து வைப்பதற்கு முதலமைச்சர் ஜெயலலிதாவின் தேதிக்காகக் காத்திருக்கிறதாம். தற்போது காவல் நிலையம் நடைபெறும் இரண்டு மாடிப் பள்ளிக் கட்டிடம் பொதுப்பணித் துறையினரால் ஆபத்தானது என்று கூறப்பட்டது. ஆனால் அங்கேதான் மக்களின் உயிர்களைக் காப்பாற்ற வேண்டிய காவல் துறையினர் பணியாற்றி வருகிறார்களாம். இந்தக் காவல் நிலையத்திற்கான மூன்று மாடி புதிய கட்டிடம், ஓராண்டு காலமாக பணி முடிந்த நிலை யில் பூட்டப்பட்டுக் கிடக்கிறது. 80 லட்சம் ரூபாய்ச் செலவில் கட்டப்பட்ட இந்தக் கட்டிடத்தில் 30 அறைகள் இருக்கிறதாம்.

இதைப் போலவேதான் செம்பியம் காவல் நிலையமும் கடந்த மூன்றாண்டு காலமாக வாடகைக் கட்டிடம் ஒன்றில் காலம் தள்ளுகிறதாம். அங்கேயும் காவல் துறை நண்பர்கள் 120 பேர் வசதிக் குறைவான இடத்தில் கடமை ஆற்றுகிறார்கள். ஆனால் புதிய காவல் நிலையக் கட்டிடம் திறப்பு விழாவிற்கான தேதி இன்னும் கிடைக்கவில்லையாம்.

என்னுடைய இந்தக் கருத்துக்குப் பிறகாவது முதலமைச்சர் ஜெயலலிதா பிரதமருக்கு அன்றாடம் கடிதம் எழுதுவதோடு, ஐந்து நிமிட நேரத்தை ஒதுக்கி, "வீடியோ கான்பரன்ஸ்" மூலமாகமாவது இந்தக் காவல் நிலையக் கட்டிடங்களைத் திறந்து வைக்க முன்வருவார்

என்று எதிர்பார்க்கிறேன். காவல்துறை அதிகாரிகள் அதுவரை இந்தப் புதிய காவல் நிலையக் கட்டிடங்கள் கழக ஆட்சிக் காலத்தில் திட்டமிடப்பட்டவை என்பதை முதலமைச்சரிடம் கூறாமல் இருப்பது நல்லது!

இந்த ஆட்சியில் எவ்வாறு முடிவடையாத பணிகளை அவசரப்பட்டுத் தொடங்கி வைக்கிறார்கள் என்பதற்கும், முடிந்த பணிகளைத் திறந்து வைக்காமல் எவ்வாறு காலம் கடத்து கிறார்கள் என்பதற்கும் இரண்டு நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன். இனியாவது முதலமைச்சர் இதுபோன்ற குறைபாடுகள் எதிர்க்கட்சியினரால் கூறப்படும்போது, உடனே அவதூறு வழக்கு என்று காவல்துறையினரை ஏவிவிடாமல் உண்மையைப் புரிந்துகொண்டு மக்களுக்குத் தொண்டாற்ற முற்பட்டால் ஆட்சி யிலே எஞ்சியுள்ள இரண்டரை ஆண்டுகளிலாவது தமிழ்நாட்டு மக்களுக்காக ஓரளவு பயன்பட்டோம் என்ற பெருமை அவருக்கு வந்து சேரக்கூடும்!

அன்புள்ள,
மு.க.

"முரசொலி"
6–9–2013.

கழக ஆட்சியில்
மகளிர்க்கான மகத்தான திட்டங்கள்!

உடன்பிறப்பே,

"முதலமைச்சர் ஜெயலலிதா உத்தரவு" என்று நாளேடுகளில் இன்று பரபரப்புடன் வெளிவந்துள்ள செய்தி என்னவென்றால், திருமண உதவித் திட்டங்களுக்கான வருமான உச்ச வரம்புத் தொகையை ஜெயலலிதா உயர்த்தி அறிவித்திருக்கிறார் என்பதுதான். மேலும் 22 லட்சத்து 23 ஆயிரத்து 243 ரூபாய்ச் செலவில் சமையல் உபகரணங்கள் வாங்கி வழங்குவதற்கும் முதலமைச்சர் உத்தர விட்டுள்ளாராம். 2013–2014ஆம் ஆண்டில், மாநில அரசின் மொத்த வருவாய் வரவுகள் மாத்திரம் 1 லட்சத்து 18 ஆயிரத்து 580 கோடி ரூபாயாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் முதல்அமைச்சரின் இன்றைய அறிவிப்பு ஒரு கோடி ரூபாய் மதிப்புடையதுகூட அல்ல; வெறும் 22 லட்சம் ரூபாய்க்கு மட்டுமே உரியதாகும்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டம் மற்றும் ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண நிதி உதவித் திட்டம் ஆகிய இரண்டு திருமண நிதி உதவித் திட்டங்களுக்கு இதுவரை நிர்ணயிக்கப்பட்டிருந்த குடும்ப

ஆண்டு வருமான உச்ச வரம்பு 24 ஆயிரம் ரூபாயிலிருந்து 72 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி நிர்ணயிக்கப்படுகிறது என்று முதல் அமைச்சர் அறிவித்திருக்கிறார்.

தமிழக அரசின் சார்பில் நடைமுறையில் ஐந்து திருமண உதவித் திட்டங்கள் உள்ளன. ஏற்கனவே தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் நடைமுறையில் இருந்த ஐந்து திருமண உதவித் திட்டங்கள்தான் இப்போதும் உள்ளன. அதாவது 1. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதிஉதவித் திட்டம்; 2. டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதி உதவித் திட்டம்; 3. ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண நிதி உதவித் திட்டம்; 4. அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதி உதவித் திட்டம்; 5. அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம் என்று கழக ஆட்சியில் இயங்கி வந்தன.

தற்போது ஜெயலலிதா அம்மையாரின் ஆட்சிக் காலத்திலும் இந்த ஐந்து திட்டங்களும் தொடர்கின்றன. ஆனால் ஒரே ஒரு மாற்றம். என்ன தெரியுமா? அஞ்சுகம் அம்மையார் நினைவுக் கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம் என்பதை – அஞ்சுகம் அம்மையார் என்னுடைய தாய் என்ற காரணத்தால் – அந்தத் திட்டத்திற்கான பெயரை மாத்திரம் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம் என்று மாற்றி

வைத்துக் கொண்டார்கள். எவ்வளவு பெரிய பதவி? எவ்வளவு சிறிய எண்ணம்?

அது எப்படியோ போகட்டும்; பெயரிலே என்ன இருக்கிறது? அந்த ஐந்து திட்டங்களில் மூன்று திட்டங்களுக்கு ஏற்கனவே வருமான வரம்பு என்பது கிடையவே கிடையாது. இரண்டு திட்டங்களுக்கு மட்டும் வருமான வரம்பு 24 ஆயிரம் ரூபாயாக இருந்ததை, இனி அறவே கிடையாது என்று கூட அறிவிக்கவில்லை, வருமான வரம்பை 72 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி யிருக்கிறார்கள். அவ்வளவுதான்!

இந்த இரண்டு திட்டங்களில் ஒன்று மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டம். இந்தத் திட்டம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது தெரியுமா? பெண் கல்வியை ஊக்குவித்து உயர்த்தும் நோக்கில், 8ஆம் வகுப்பு மற்றும் அதற்கு மேல் படித்த 18 வயதிற்கு மேற்பட்ட பெண்களின் திருமணத்திற்கென அவர்களின் பெற்றோருக்கு திருமண நிதி உதவித் தொகையை 5 ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டம் 3-6-1989 அன்று முதல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் தொடங்கப்பட்டது.

பின்னர் திருமண நிதி உதவி பெறுவதற்கான கல்வித் தகுதி பத்தாம் வகுப்பாகவும், திருமண நிதிஉதவித் தொகை 10 ஆயிரம் ரூபாயாகவும் உயர்த்தப்பட்டது. ஆனால் இந்தத் திட்டம் 2001ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சி ஜெயலலிதா தலைமையில் ஏற்பட்டதும்,

தி.மு.கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டம் என்பதற்காக 1–4–2002 முதல் நிறுத்தப்பட்டு விட்டது.

2006ஆம் ஆண்டு மீண்டும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டவுடன், இந்தத் திருமண நிதி உதவி அளிக்கும் திட்டம் திரும்பவும் நடைமுறைப்படுத் தப்பட்டதோடு, திருமண நிதி உதவியும் 10 ஆயிரம் ரூபாயிலிருந்து 15 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டது.

2008ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், 20–3–2008 முதல் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதி உதவித் தொகை 20 ஆயிரம் ரூபாயாகவும், 1–4–2010 முதல் 25 ஆயிரம் ரூபாய் என்றும் உயர்த்தி வழங்கப்பட்டது. மேலும் இந்தத் திட்டத்தின்கீழ் பயன்பெறுவோரின் குடும்ப ஆண்டு உச்ச வருமான வரம்பு 12 ஆயிரம் ரூபாயிலிருந்து 24 ஆயிரம் ரூபாயாகவும் தி.மு.கழக ஆட்சியிலேயே உயர்த்தப்பட்டது.

2006க்குப்பின் 4 இலட்சத்து 64 ஆயிரத்து 756 ஏழைப் பெண்களின் திருமணங்களுக்கு 880 கோடியே 55 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் நிதி யுதவியாக வழங்கப்பட்டு, ஏழைக் குடும்பங்கள் தி.மு.கழக ஆட்சியில் ஐந்தாண்டுகளில் பயனடைந்துள்ளன.

2011ஆம் ஆண்டு முதல் தி.மு.கழக ஆட்சி தொடர்ந்திருக்குமேயானால், இந்த வருமான வரம்பு என்பதே மற்ற மூன்று திட்டங்களுக்கும் இல்லாமல் செய்திருப்பதைப் போல, ஐந்து திட்டங்களுக்கும் வருமான

உச்ச வரம்பே இல்லை என்றாக்கப்பட்டிருக்கும். அதற்கு மாறாக தற்போது உச்ச வரம்பை 24 ஆயிரம் ரூபாய் என்பதை 72 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள்.

மற்றொரு திட்டமான, டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதி உதவித் திட்டம், இளம் வயது விதவைகள், மறுமணம் செய்து புதுவாழ்வு பெறுவதை ஊக்குவிக்கும் சமுதாயச் சீர்திருத்தத்தினைக் கருத்திலே கொண்டு, 1975 ஆம் ஆண்டு அடியேன் முதலமைச்சராக இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேதான் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின்கீழ் நிதி உதவியாக வழங்கப்பட்டு வந்த 15 ஆயிரம் ரூபாய், 20–11–2008 முதல் 20 ஆயிரம் ரூபாயாகவும், பின்னர் 25 ஆயிரம் ரூபாயாகவும் உயர்த்தப்பட்டதும் தி.மு.கழக ஆட்சியிலேதான்! இத்திட்டத்தின்கீழ் கழக ஆட்சியில் ஐந்தாண்டுகளில் 910 ஏழை விதவைப் பெண்கள் மறுமணம் செய்து கொள்ள 1 கோடியே 72 லட்சத்து 71 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டது.

ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு விதவைத் தாய்மார்களின் மகள் திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ் கழக ஆட்சியில் ஐந்தாண்டுகளில் 16,365 பெண்களின் திருமணங்களுக்காக 30 கோடியே 32 இலட்சத்து 93 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டது.

அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ்

கழக ஆட்சியில் ஐந்தாண்டுகளில் 2220 பெண்களின் திருமணங்களுக்காக 4 கோடியே 58 ஆயிரம் ரூபாய் நிதிஉதவி வழங்கப்பட்டது.

இந்த ஐந்து திருமண நிதி உதவித் திட்டங்களின் கீழ் ஐந்தாண்டுகளில் தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் 4 இலட்சத்து 95 ஆயிரத்து 634 ஏழைப் பெண்களின் திருமணங்களுக்காக மொத்தம் 937 கோடியே 50 இலட்சத்து 87 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது.

சமுதாயத்தில் காணப்படும் சாதி வேறுபாடுகளைக் களையும் பொருட்டும், வரதட்சணைக் கொடுமையை ஒழிக்கும் பொருட்டும், கலப்புத் திருமணம் செய்து கொள்ளும் தம்பதிகளுக்கு நிதி உதவி வழங்கி ஊக்கப்படுத்த, கலப்புத் திருமண நிதிஉதவித் திட்டம் 1–7–1967 முதல் தி.மு.கழக ஆட்சியில் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலந்தொட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. கழக ஆட்சியில் 2006–2011ஆம் ஆண்டுகளில் இத்திட்டத்தின்கீழ் 11 ஆயிரத்து 383 தம்பதியருக்கு 20 கோடியே 89 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டது.

இந்தத் திட்டத்திற்கான பெயரைத்தான் நீக்கி விட்டு, ஏற்கனவே தி.மு. கழக ஆட்சியில் கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதி உதவி அளிக்கும் திட்டத்திற்கு வைக்கப்பட்டிருந்த பெயரான டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியின் பெயரை அ.தி.மு.க. ஆட்சியிலே சூட்டி

யிருக்கிறார்கள். இந்தக் கலப்புத் திருமணத் திட்டத்தின் கீழ் பயனடைவோருக்கும் ஏற்கனவே வருமான உச்ச வரம்பு கிடையாது.

திராவிட இயக்கத்தின் முக்கியக் கோட்பாடுகளில் ஒன்று மகளிர் முன்னேற்றம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பெண்கள் முன்னேற்றம் குறித்த பல சட்டங்களையும், திட்டங்களையும் நிறைவேற்றி பெண்கள் அரசியல் சமூக பொருளாதார நிலைகளில் விடுதலை பெற்று வாழ்வில் படிப்படியாக முன்னேறவும், பட்டம், பதவிகள் பெற்றுச் சமுதாயத்தில் உயர்நிலை பெறவும் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

1973இல் தமிழகக் காவல் துறையில் முதல் முதலாக பெண்கள் நியமனம்; இன்று இலட்சக்கணக்கான ஏழை எளிய மகளிர் வாழ்வில் பொருளாதார விடுதலைக்கு வழிவகுத்து சுயஉதவிக் குழுக்களை உருவாக்கி – 1989இல் தருமபுரியில் தொடங்கி வைத்த மகளிர் மேம்பாட்டுத் திட்டம்; ஏழைப் பெண்களுக்கு ஈ.வெ.ரா. நாகம்மையார் பெயரில் இலவசப் பட்டப் படிப்புத் திட்டம்; ஏழை கர்ப்பிணிப் பெண்கள் ஊட்டச்சத்து உட்கொள்ள தற்போது 6000 ரூபாய் நிதியுதவி வழங்கும் டாக்டர் முத்துலட்சுமிரெட்டி நினைவு மகப்பேறு நிதி உதவித் திட்டம்; 1990இல் அரசுப் பணிகளில் பெண்களுக்கு 30 சதவீத இடஒதுக்கீடு; பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் தனிச் சட்டம்; 1996இல் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு; முதல் தலைமுறையாக தொழில் முனையும் மகளிர்க்கு மானிய

உதவி; தொழில் வளாகங்களில் தொழில்மனை ஒதுக்கீட்டில் மகளிர்த் தொழில் முனைவோர்க்கு முன்னுரிமை என்பன போன்ற பல்வேறு திட்டங்கள் கழக ஆட்சியில்தான் செயல்படுத்தப்பட்டு பெண்கள் பல வழிகளிலும் முன்னேற்றம் அடைந்து வருகின்றனர்.

அடுத்து முதலமைச்சரின் அறிவிப்பில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் 1982ஆம் ஆண்டு சத்துணவுத் திட்டம் துவக்கப்பட்டது என்றும், அந்தத் திட்டத்தின்கீழ் கடந்த முப்பதாண்டுகளாக ஒரே மாதிரியான உணவு வழங்கப்பட்டு வருகிறது என்றும், அதை அறிந்த முதலமைச்சர் ஜெயலலிதா புதிய வகை உணவுகளை வழங்க உத்தரவிட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் என்ற பெயரையும், அந்தத் திட்டத்தையும் தி.மு. கழக ஆட்சியிலும், அதே பெயரில்தான் தொடர வேண்டு மென்று கருதி நடைமுறைப்படுத்தியவன் நான். அ.தி.மு.க. ஆட்சியில் தொடங்கிய திட்டம் ஆயிற்றே, அதற்கு எப்படி மூடு விழா நடத்தலாம், முட்டுக்கட்டை போடலாம் என்றெல்லாம் நான் கருதியது கிடையாது. மாறாக அந்தச் சத்துணவுத் திட்டத்தை மேலும் சிறப்பாக நடத்திட வேண்டுமென்று திட்டமிட்டு செயல்படுத்தியவனும் நான் என்பதை தமிழ்நாடே நன்கறியும்.

பள்ளிக் குழந்தைகளுக்குச் சத்துணவுடன் வாரம் இரண்டு முறை முட்டை வழங்கும் திட்டம் 15.7.2006 முதல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் செயல்படுத்தப்பட்டது. பின்னர் கழக

ஆட்சிக் காலத்திலேயே 15.7.2007 முதல் வாரம் மூன்று முட்டை வழங்கப்பட்டு வந்தது. மேலும் 17.9.2010 முதல் வாரம் ஐந்து முட்டை வழங்கப்பட்டது. இதன்மூலம் 57 இலட்சத்து 74 ஆயிரத்து 673 பள்ளி மாணவ / மாணவியர்கள் பயன்பெற்றனர்.

முட்டை சாப்பிடாத 37249 குழந்தைகளுக்கு சத்துணவுடன் வாழைப்பழம் தி.மு. கழக ஆட்சியில் வழங்கப்பட்டது. மேலும் 15.7.2007 லிருந்து 1 முதல் 2 வயது வரை உள்ள, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ் பயனடையும் குழந்தைகளுக்கு வாரம் ஒரு முறை முட்டை வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டது. இதன்மூலம் 4 இலட்சத்து 80 ஆயிரத்து 870 குழந்தைகள் பயன்பெற்றனர்.

பணியிலிருக்கும் பொழுது இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணியிடம் வழங்க 25.10.2007 முதல் வகை செய்யப்பட்டது. சத்துணவுப் பெண் பணியாளர்களுக்கு மகப்பேறு விடுப்பு மூன்று மாதங்களுக்கு ஊதியத்துடன் வழங்க ஆணையிடப்பட்டது.

13.5.1996 முதல் 13.5.2001 இல் கழக அரசுக் காலத்தில் சத்துணவுப் பணியாளர்களுக்குக் குடும்பநல நிதித் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு; பணியிலிருக்கும்போது காலமான சத்துணவுப் பணியாளர்களின் வாரிசு தாரர்களுக்கு அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படுவது போன்று ஒன்றரை இலட்சம் ரூபாய் குடும்ப நல நிதி வழங்கப்பட்டது.

சத்துணவு சமையலர் / உதவியாளர்கள் ஓய்வு பெறும் வயதை 55 லிருந்து 58 ஆக உயர்த்தியது. சத்துணவு / அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு சிறப்பு சேமநல நிதித் திட்டம் தொடங்கப்பட்டு; அரசின் பங்குத் தொகை 5 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது.

சத்துணவு மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு முன்பு அ.தி.மு.க, ஆட்சியில் ஒருமுறை கூட ஊதிய விகிதம் உயர்த்தி வழங்கப்படவில்லை. ஆனால் கழக ஆட்சியிலேதான் அவர்களுக்கு மூன்று முறை ஊதிய விகிதம் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

கழக ஆட்சியிலேதான், சத்துணவு மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களில் பத்தாண்டுப் பணி முடித்தவர்களுக்கு, ஒரு ஊதிய உயர்வும், 20 ஆண்டு பணி முடித்தவர்களுக்கு மற்றொரு ஊதிய உயர்வும் வழங்கப்பட்டது.

அ.தி.மு.க ஆட்சியில் தொகுப்பூதியத்தில் பணியாற்றி வந்த சத்துணவு சமையலர்கள், உதவியாளர்கள், அங்கன்வாடி உதவியாளர்கள் ஆகிய அனைவருமே கழக ஆட்சியிலேதான் சிறப்பு ஊதிய விகிதம் பெற்று வருகின்றனர்.

சத்துணவு மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு அ.தி.மு.க ஆட்சியில் அகவிலைப்படி தவிர ஏனைய படிகள் எதுவும் வழங்கப்படவில்லை. ஆனால் கழக ஆட்சியிலே தான், அவர்களுக்கு முதல்முறையாக 1.6.2009 முதல் மாதந்தோறும் வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி ஆகியவைகளும், 100 ரூபாய் மருத்துவப் படியும்,

2000 ரூபாய் பண்டிகைக் கால முன்பணமும் வழங்கப்பட்டு வருகின்றன. சத்துணவு மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு அ.தி.மு.க ஆட்சியில் மாதாந்திர ஓய்வூதியம் எதுவும் வழங்கப்படவில்லை. ஆனால் கழக ஆட்சியிலேதான் ஓய்வு பெற்ற சத்துணவு அமைப்பாளர்களுக்கும், அங்கன்வாடிப் பணியாளர்களில் சமையலர்களுக்கும், முதல் நிலை அங்கன்வாடி உதவியாளர்களுக்கும் – சமையல் உதவியாளர்களுக்கும், இரண்டாம் நிலை அங்கன்வாடி உதவியாளர்களுக்கும் முறையே மாதந்தோறும் ரூபாய் 700, ரூபாய் 600, ரூபாய் 500 என்று முதல்முறையாக ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

மகளிர் நலனிலும், குழந்தைகள் நலனிலும் அக்கறை கொண்டு கழக அரசு ஆற்றிய பணிகள் இன்னும் ஏராளம் இருக்கின்றன. மகளிர் மேம்பாட்டுக்காக இன்றைய ஆட்சியினர் நாங்கள் அதைச் செய்தோம்; இதைச் செய்தோம் என்று எதைச் சொல்லிக் கொண்டாலும், அவை அனைத்திற்கும் ஆணிவேராகத் தி.மு.கழக ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டம்தான் அமைந்திருக்கிறது என்பதை மறைத்துவிட முடியாது. அந்த அளவுக்கு அனைத்து முனைகளிலும் அணி அணியாகப் பல்வேறு வகையான திட்டங்கள் வகுக்கப்பட்டு மகளிர் முன்னேற்றத் திற்காகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டன என்பதைத் தமிழக நிர்வாக வரலாறு பதிவு செய்து வைத்திருக்கிறது!

“முரசொலி”
8–9–2013.

அன்புள்ள,
மு.க.

பிரச்சினை தீருமா?
பேருந்து நிலையம் திறக்கப்படுமா?
(கலைஞர் பதில்கள் – 12.9.2013)

கேள்வி :– பா.ஜ.க. செய்தித் தொடர்பாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான திரு. தருண் விஜய், தமிழ்மொழியை இந்தியாவின் இரண்டாவது ஆட்சி மொழியாக அங்கீகாரம் செய்ய வேண்டுமென்று கூறியிருக்கிறாரே?

கலைஞர் :- மகிழ்ச்சியை அளிக்கும் செய்தி அது! மாநிலங்களவையில் திரு. தருண்விஜய் அவர்கள் பேசும்போது, தமிழ்மொழியை இந்திய அரசின் இரண்டாவது ஆட்சி மொழியாக அங்கீகரிக்க வேண்டு மென்று பேசியிருக்கிறார். மேலும் "வடநாட்டில் உள்ள நண்பர்கள் தங்களுக்கே உரித்தான உயர்வு மனப்பான்மையின் காரணமாக நம்மிடமுள்ள மிகப் பழமை வாய்ந்ததும், புகழ் பெற்றதுமான தமிழ்மொழியின் ஆழத்தை இன்னும் உணரவில்லை. பல்லாண்டுக் காலமாக அந்தப் பழம்பெரும் மொழியின் செல்வாக்கு, கடல் கடந்து பல்வேறு நாடுகளிலும் உணரப்பட்டது. தமிழில் அடிப்படைக் கல்வி அறிவைப் பெறும் அரசியல் அலுவலர்களுக்கு சிறப்புப் பதவி உயர்வும், கூடுதல் வருவாயும் கொடுத்து ஊக்குவிக்க

வேண்டும். வடநாட்டிலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தமிழ்மொழியைப் பரப்புவதற்காக சிறப்புத் திட்டம் ஒன்றை மத்தியஅரசு வகுத்துச் செயல்படுத்த வேண்டும். நாட்டின் மறுமலர்ச்சிக்கும், புதிய கலாச்சார மாற்றத்துக்கும் உறுதுணையாக இருக்கும் தமிழ் மொழிக்குரிய மரியாதையையும், தகுதியையும் அளித்துள்ளோமா என்பதைச் சிந்திக்க வேண்டும்" என்று பேசியிருப்பது தமிழ் உணர்வுள்ள அனைவருக்கும் பெருமிதம் தருவதாகும். தருண் விஜய் பேசியதைத் தொலைக்காட்சியில் பார்த்தவுடனேயே அவருக்குப் பாராட்டுத் தெரிவிக்குமாறு மாநிலங்களவை உறுப்பினர் தம்பி கே.பி. ராமலிங்கத்திடம் கூறினேன்.

திரு. தருண்விஜய் அவர்களுடைய உணர்வுகளைப் பாராட்டி நன்றி செலுத்துகிற அதேவேளையில், செம்மொழியாம் தமிழ்மொழியை மத்திய அரசின் இரண்டாவது ஆட்சி மொழியாக அல்ல, மத்திய அரசின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஏற்க வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகம் நீண்ட ஆண்டுகளாக வலியுறுத்தி வருகிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

2011ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின்போது, கழகத்தின் சார்பில் வைக்கப்பட்ட நமது தேர்தல் அறிக்கையில் "திராவிட முன்னேற்றக் கழகத்தின் விடாமுயற்சியின் காரணமாக தமிழ்மொழி மத்திய அரசால் செம்மொழி என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் செம்மொழியான தமிழ், மத்திய ஆட்சி மொழியாக இன்றளவும் இடம் பெறவில்லை. அறிஞர் அண்ணா காலத்தில் இருந்து அனைத்து தேசிய மொழிகளையும் மத்திய ஆட்சி மொழிகளாக்க வேண்டும் என்றும், அவ்வகை அணுகுமுறைதான் மொழிப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக அமையும் என்றும் தி.மு.க. தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. எனவே, செம்மொழியாம் தமிழை மத்திய அரசின் ஆட்சி மொழியாக அறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்துவோம்" என்று குறிப்பிட்டுள்ளதை நினைவுகூர வேண்டும்.

கேள்வி :– கச்சத் தீவுப் பிரச்சினையில் மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பிரமாணப் பத்திரத்திற்கு தமிழக அரசு பதிலளிக்கவில்லையே?

கலைஞர் :- கச்சத் தீவு இந்தியாவுக்குத்தான் உரிமையானது என்பதைச் சுட்டிக்காட்டிடும் பல்வேறு ஆதாரங்களை எடுத்துக்காட்டி, நான் குறிப்பிட்ட வரலாற்றுப்பூர்வமான ஆதாரங்களையும், மேலும் தமிழக அரசிடம் இருக்கும் கூடுதல் ஆவணங்களையும் இணைத்து உச்ச நீதிமன்றத் தில் உரிய முறையில் தாக்கல் செய்வது மிக மிக அவசியமாகும் என்றும், அதனைத் தமிழக அரசு உடனே செய்திட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டேன்.

இந்தப் பிரச்சினையில் நான் எடுத்துக் காட்டியதற்கு மேலும் வலுவூட்டும் வகையில் ராமநாதபுரம் சேதுபதி சமஸ்தானத்திற்கே கச்சத் தீவு சொந்தமானது என்பதற்கான ஆதாரங்களை வழங்கிட சேதுபதியின் வாரிசுகள் முடிவு செய்திருப்பதாகவும் ஏடுகளில் செய்தி வந்துள்ளது.

கச்சத் தீவு தங்கள் பரம்பரைக்குச் சொந்தமானது என்பதற்கான ஆதாரங்களை ராமநாதபுரம் மன்னர் பரம்பரையினர், அரசிடம் ஒப்படைக்க முடிவு செய்திருக் கிறார்களாம். அதன் தொடர்ச்சியாக ராமநாதபுரம் மன்னராக இருந்த ராமநாத சேதுபதியின் மகளும், சென்னையில் வசித்து வருபவருமான ராஜேஸ்வரி நாச்சியார் கூறும்போது, "கச்சத்தீவு எங்களுக்குச் சொந்தமானது என்பதற்கான ஆவணங்களை, 1968இல் என் தந்தை, அவரிடம் உதவியாளராக இருந்த ராமச்சந்திரன் மூலம், வெளியுறவுத் துறைச் செயலாளராக இருந்த நாயரிடம் வழங்கியுள்ளார். கிழவன் சேதுபதி காலத்திலிருந்து கச்சத்தீவு எங்கள் மூதாதையர் வசம் இருந்துள்ளது. மண்டபம் மரைக்காயர் உட்பட, நான்கு பேருக்கு, குத்தகைக்கு விட்டுள்ளனர். இத்தீவை மீனவர்கள் பயன்படுத்திக் கொள்ள அனுமதி அளித்துள்ளனர்" என்றெல்லாம் தெரிவித்திருக்கிறார். மேலும் ராமநாதபுர சேதுபதியின் தம்பி மகன், குமரன் சேதுபதி கூறுகையில், "கச்சத்தீவு, ராமநாதபுரம் மன்னருக்குச் சொந்தமானது என்பதற்கான ஆதாரங்கள் உள்ளன. அவற்றை விரைவில் முதல்வரைச் சந்தித்து வழங்கிட உள்ளோம். கச்சத் தீவை மீட்க இது உறுதுணையாக இருக்கும்" என்று தெரிவித்திருக்கிறார்.

மேலும் கச்சத் தீவினைத் திரும்பப் பெறுவதற்கு தமிழக அரசுக்குத் தேவையான அனைத்து ஒத்துழைப்பையும் வழங்குவோம் என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

எனவே நான் ஏற்கனவே தெரிவித்த கருத்தின்படி தமிழக அரசு இனியும் சுணக்கமாக இல்லாமல், ராமநாதபுரம் மன்னர் குடும்பத்தினர் கூறியுள்ள அந்த ஆதாரங்களையும், தமிழக அரசிடம் உள்ள ஆவணங்களையும் திரட்டி உச்ச நீதிமன்றத்தில் எடுத்துக்காட்டிட முன்வர வேண்டுமென்று மீண்டும் வலியுறுத்துகிறேன்.

கேள்வி :– இந்த ஆண்டு குறுவைச் சாகுபடி அறவே பொய்த்துப் போய்விட்ட நிலையில், சம்பா சாகுபடியிலும் அரசு இலக்கை எட்ட முடியாத நிலை இருப்பதாகவும், அதைக் கண்டு அமைச்சரும், அதிகாரிகளும் அதிர்ச்சி அடைந்ததாகவும் செய்தி வந்திருக்கிறதே ?

கலைஞர் :- சம்பா சாகுபடியில் அரசு இலக்கில், ஐம்பது சதவிகிதம் அளவுக்குக்கூட பூர்த்தியாகவில்லை என்பதைக் கண்டு, டெல்டா மாவட்டங்களில் ஆய்வுக்குச் சென்ற அமைச்சரும், அதிகாரிகளும் அதிர்ச்சி அடைந்ததாக அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

தஞ்சாவூர், திருவாரூர், நாகை உள்ளிட்ட காவிரி டெல்டா மாவட்டங்களில், சம்பா சாகுபடிப் பாசனத்திற்காக முன் கூட்டியே கடந்த மாதம் 2ஆம் தேதியன்றே மேட்டூர் அணை திறக்கப்பட்டது. தண்ணீர் திறந்தாலே சம்பா அறுவடைக்கு வந்துவிடும் என்ற நினைப்பில், இந்த ஆண்டு டெல்டா மாவட்டங்களில் 12 லட்சம் ஏக்கரில் சம்பா சாகுபடி நடைபெறும் என்று அரசு அறிவித்தது. ஆனால் கிளை ஆறுகள், கால்வாய்கள், வாய்க்கால்கள்

தூர்ந்து போக விடப்பட்ட நிலையில், கடைமடைப் பகுதி வரை பாசனத்திற்குத் தண்ணீர் செல்வதில் பெரும் சங்கடம் ஏற்பட்டது. மேட்டூர் அணையிலிருந்து வந்த தண்ணீரில் பத்து டி.எம்.சி.க்கு மேலான தண்ணீர் எதற்கும் பயன்படாமல் கடலில் வீணாகச் சென்று கலந்தது. தூர்வார அரசு ஒதுக்கிய 28 கோடி ரூபாய் என்ன ஆனது என்று விவசாயிகளே கேள்வி கேட்டனர். ஒரத்தநாடு போன்ற பகுதிகளில் விவசாயிகள் தாங்களே சொந்த முயற்சியில் வாய்க்கால் வெட்டி, பாசனத்திற்குத் தண்ணீரைக் கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர். விவசாயிகளிடம் தேவையான விதை நெல் மற்றும் நிதி ஆதாரம் இல்லாதது; அரசியல் குறுக்கீட்டால், கூட்டுறவுக் கடன் கிடைப்பதிலே பெரும் சிக்கல்; விதை நெல் மற்றும் உரங்கள் விலை உயர்வு போன்றவற்றால் டெல்டா மாவட்டங்களில் சம்பா சாகுபடி முறையாக முழு வீச்சில் தொடங்கப்படவில்லை.

குறுவை, சம்பா சாகுபடி நேரங்களில் அரசின் சார்பில் என்னென்ன முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டும், எத்தகைய உதவிகளை வழங்க வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் நான் ஏற்கனவே பலமுறை தெரிவித்திருந்தபோதிலும் அதனை அரசினர் காதில் போட்டுக் கொள்ள வில்லை. தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிப்பதைப் போல, வேளாண்துறை அமைச்சரும் அதிகாரிகளும் டெல்டா மாவட்டங்களில் ஆய்வு செய்யப் புறப்பட் டனர். முதலில் தஞ்சை மாவட்டத்தில் ஆய்வு செய்தபோது, பெரும்பான்மையான நிலங்கள் சாகுபடி

செய்யப்படாமல், காலியாக இருந்ததைப் பார்த்து அதிர்ச்சி அடைந்திருக்கிறார்கள். அந்த மாவட்டத்தில் வழக்கமாக நடக்கும் சாகுபடிப் பரப்பளவில், ஐம்பது சதவிகிதத்திற்கும் குறைவாகவே சம்பா சாகுபடி நடந்துள்ளது. அதனால் திருத்திய நெல் சாகுபடி முறை மற்றும் இயந்திர நடவு முறை ஆகியவற்றை மட்டுமே ஆய்வு செய்து விட்டுத் திரும்பி விட்டார்களாம்!

கேள்வி:– செய்து முடிக்கப்பட்ட பணிக்கு டெண்டர் கோரும் அதிசயம் எங்கேயாவது நடந்திருக்கிறதா?

கலைஞர் :- ஏன், இந்த அ.தி.மு.க. ஆட்சியிலேயே நடைபெற்றதாக என் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வந்தார்கள். அது தவறு என்றால், அரசு மறுக்கட்டும், ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

கடந்த மார்ச் திங்கள் 9ஆம் தேதியன்று தஞ்சையிலே மிகப் பெரிய விழா ஒன்றை முதல் அமைச்சர் காவேரித் தண்ணீரைப் பெற்றுத் தந்து விட்டார் என்பதற்காக ஏற்பாடு செய்து பாராட்டோ பாராட்டு என்று பாராட்டியதை யாரும் மறந்திருக்க முடியாது. அந்த நிகழ்ச்சியின்போது தஞ்சை நகராட்சி சார்பில் மட்டும் முதல்வர் வருகைக்காக ஒன்றரைக் கோடி ரூபாய் அளவிற்குச் செலவு செய்திருக்கிறார்கள். அப்படி என்ன செலவு? எதற்கான செலவு?

ஒருசிலவற்றை மட்டும் குறிப்பிடுகிறேன்! வாகன நிறுத்துமிடம் சுத்தம் செய்ய 8 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய். மைதானத்தில் வாகன நிறுத்த இடத்தைச் சுத்தம்

செய்ய 2 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய். மணிமண்டபம் சாலையைச் சுத்தம் செய்ய 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய். பேருந்து வளாகத் தடுப்பு வேலிக்கு வர்ணம் பூச 17 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய். ஆணையர் அறைக்கு நாற்காலி வாங்க 70 ஆயிரம் ரூபாய். ஒருவேளை வெள்ளி நாற்காலியாக இருக்குமோ?

இதுபோன்ற பணிகளை, நகராட்சி சட்டப் பிரிவு 15ன் படி மன்றத்தின் அனுமதியின்றி செய்து முடிக்க நகராட்சி ஆணையருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் தஞ்சையில் நகராட்சி ஆணையர் இதனைத் தவிர்த்து விட்டார். முதலமைச்சர் தஞ்சைக்கு வந்தது 9–3–2013. அதற்காக 30 லட்சம் ரூபாயில் ஹெலிகாப்டர் தளம் அமைத்தார்கள். இதற்காக ஒப்பந்தப் புள்ளிகளை 5–4–2013 அன்றுதான் பெற்றிருக்கிறார்கள். ஹெலிகாப்டர் தளம் அமைக்கப்பட்டு 9ஆம் தேதி முதலமைச்சரும் வந்து சென்ற பிறகு 26 நாட்கள் கழித்துத்தான் டெண்டர் பெற்று முடிவு செய்திருக்கிறார்கள். பணியை ஒருவரிடம் ஒப்படைத்து பணி முடிந்த பிறகு, அந்தப் பணிக்காக டெண்டர் கோரும் அதிசயம் அ.தி.மு.க. ஆட்சியிலேதான் நடந்துள்ளது.

இதிலே இன்னொரு வேடிக்கை. 9ஆம் தேதி முதலமைச்சர் வருவதற்கு முன்பு யார் ஹெலி காப்டர் தளம் அமைத்தாரோ, அதேநபர்தான் குறைந்த தொகையைக் குறிப்பிட்டதன் காரணமாக டெண்டர் பெற்றிருக்கிறார். மற்றவரைக் காட்டிலும், இவர் குறைந்த தொகையை எவ்வாறு ஒப்பந்தப் புள்ளியிலே குறிப்பிட்டார்? வேறு

ஒப்பந்தக்காரர் ஒருவர், உண்மையாக ஹெலி காப்டர் தளம் அமைத்தவரைவிட மேலும் குறைவாகத் தொகை குறிப்பிட்டிருந்தால், அப்போது என்ன செய்திருப்பார்கள்?

அடுத்து இந்த முடிவு நகர்மன்றக் கூட்டத்திலே நிர்வாக அனுமதிக்காக வைக்கப்பட்டுள்ளது. எப்போது தெரியுமா? மே 28ஆம் தேதி. முடிக்கப்பட்ட ஒரு பணிக்கான மதிப்பீட்டுத் தொகைக்கு நிர்வாக அனுமதி 79 நாட்களுக்குப் பிறகு கோருவது என்பதே சட்ட விதிகளுக்குப் புறம்பானதாகும்.

கேள்வி :– இந்து அறநிலையத் துறைக்குச் சொந்தமான மண்டபங்களை நாத்திகர்களுக்கு நிகழ்ச்சிகள் நடத்த வாடகைக்குத் தரக் கூடாது என்று அரசின் சார்பில் சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறதே?

கலைஞர் :- அப்படியொரு முடிவினை அ.தி.மு.க. அரசு எடுத்திருக்குமேயானால் அது கண்டிக்கத்தக்க முடிவாகும். பண்டித நேரு அவர்களே தன்னை ஒரு நாத்திகர் என்றுதான் அறிவித்துக் கொண்டார். அண்ணாவே நாத்திகர்தான். அந்த அண்ணாவின் பெயரை தங்கள் கட்சிக்கு வைத்துக் கொண்டிருப்பவர்கள் இப்படி ஒரு முடிவினை எடுத்திருப்பது வேதனைக்குரிய ஒன்றாகும். அந்தச் சுற்றறிக்கையை அரசு உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும். "பகுத்தறிவாளர்கள் இந்தச் சுற்றறிக்கையை ரத்து செய்யக் கோரி நீதிமன்றத்தில்

வழக்குத் தொடர்ந்தால் சட்டத்தின் முன் இந்த ஆணை நிற்காது” என்று திராவிடர் கழகத் தலைவர், கி. வீரமணி அவர்கள் சுட்டிக்காட்டியிருப்பதை இந்த அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

கேள்வி :– தேனியில் பேருந்து நிலையப் பணிகள் முடிவடைந்த போதிலும், இன்னும் திறக்கப்படவில்லையே?

கலைஞர் :- இந்த ஆட்சியில் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்கள் எவையெவை எந்தெந்த ஊரில் திறக்கப்படவில்லை என்று பட்டியல்தான் திரட்ட வேண்டும். இரண்டு நாட்களுக்கு முன்புதான் சென்னையில் கட்டி முடிக்கப்பட்ட காவல் நிலையங்கள் முதல்வரின் தேதிக்காக திறக்கப்படாமல் இருப்பதைச் சுட்டிக்காட்டியிருந்தேன். இப்போது தேனியைப் பற்றிக் கேட்கிறீர்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் தேனி பைபாஸ் சாலையோரம் இடங்களைக் கையகப்படுத்தி 11 கோடியே 50 லட்சம் ரூபாய்ச் செலவில் புதிய பேருந்து நிலையக் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டன. அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட தாயிற்றே; விடுவார்களா? பணிகள் தாமதப்படுத்தப்பட்டன. அதன்பிறகு பணி நிறைவு பெற்று நான்கு மாதங்கள் ஆகின்றன. இன்னும் திறக்கப்படவில்லை. திறக்கப் படாததற்குக் காரணம், தேனி நகர்மன்றத் தலைவருக்கும், நகர அ.தி.மு.க. செயலாளருக்கும் இடையே பிரச்சினை என்கிறார்கள்! பிரச்சினை எப்போது தீருமோ? பேருந்து நிலையம் எப்போது திறக்கப்படுமோ?

***

நீதி வெல்லும்; நிச்சயம் வெல்லும்!

உடன்பிறப்பே,

எந்தவித சிக்கல் வந்தாலும் அதை ஏற்பது என்ற ஒரே முடிவோடு இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். ஏனென்றால் நீதி நிலைக்க வேண்டும் என்பதில் எனக்குள்ள அசையா நம்பிக்கை தான்.

பெங்களூர் சிறப்பு நீதி மன்றத்தில் ஜெயலலிதாவின் மீதான சொத்துக் குவிப்பு வழக்கு நடைபெற்று வருகிறது. இந்த வழக்கில் ஜெயலலிதாவுக்கு எதிராக அரசு சார்பில் வழக்கறிஞராக இருந்தவர் திரு.பவானி சிங். இவருக்கு முன் இந்தப் பதவியில் இருந்தவர் திரு. ஆச்சார்யா.

ஆச்சார்யா அரசு வழக்கறிஞராக இருந்தபோது, அவர் மீது ஜெயலலிதா தரப்பில் பல புகார்கள் சொல்லப்பட்டதுடன், அங்கே பா.ஜ.க. ஆட்சி இருந்தபோது, சென்னையிலிருந்து அதிகார பலமிக்க ஒரு குழு, பெங்களூர் சென்று, முகாமிட்டு பணியாற்றியதன் விளைவாக, கனத்த மனதுடன், வெளிப்படையாக தனது மன சங்கடத்தைத் தெரிவித்துவிட்டு இந்த

வழக்கிலிருந்தே தன்னை விடுவித்துக் கொண்டார். சிறப்பு அரசு வழக்கறிஞராகப் பணியாற்றிய பி.வி.ஆச்சார்யா பதவி விலகல் கடிதத்தை கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதிக்கு அனுப்பிய போது, தலைமை நீதிபதியாக இருந்த திரு. விக்ரமஜித் சென் அவர்கள் அந்தப் பதவி விலகலை ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த தலைமை நீதிபதி உச்ச நீதிமன்ற நீதிபதியாகப் பதவி உயர்வு பெற்று சென்ற பிறகு, பொறுப்பு தலைமை நீதிபதியாகப் பொறுப்பேற்றவர் திரு. ஸ்ரீதர் ராவ். அவர் ஆச்சார்யா அவர்களின் பதவி விலகலை உடனடியாக ஏற்றுக் கொண்டார்.

ஆச்சார்யா அவர்கள் விலகிய பின், அவருடைய இடத்திற்கு கர்நாடக அரசால் அரசு வழக்கறிஞராக, ஜெயலலிதாவுக்கு எதிராக வாதிடுவதற்காக நியமிக்கப்பட்டவர்தான் பவானி சிங். ஆனால் அவரது நடைமுறைகள் குற்றவாளிகளுக்கு ஆதரவாக இருந்து வந்தன. ஜெயலலிதாவின் சாட்சியங்கள் விசாரணை முடிவுற்றபின், அரசு வழக்கறிஞர்தான் தன் வாதங்களை எடுத்து வைத்திருக்க வேண்டும். ஆனால் அதற்கு மாறாக ஜெயலலிதாவின் வழக்கறிஞர் பி. குமார் தன்னுடைய வாதங்களை எடுத்து வைக்க, அரசு வழக்கறிஞர் அதை கண்டுகொள்ளவே இல்லை.

உச்ச நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணை நடைபெற்றபோது, கர்நாடக அரசுக்காக வாதாடிய மூத்த வழக்கறிஞர் திரு வாகனவதி; திரு. பவானி சிங் அவர்களை, அரசு வழக்கறிஞராக நியமிக்க வேண்டு மென்று கர்நாடக அரசு பரிந்துரையே செய்யவில்லை என்றும், கர்நாடக அரசு வேறு நான்கு வழக்கறிஞர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, அவர்களிலே ஒருவரை கர்நாடக உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி நியமித்துக் கொள்ளலாம் என்றும் பரிந்துரை செய்த விவரத்தைக் குறிப்பிட்டார் என்பதும் நினைவில் கொள்ளத் தக்கது.

அப்போது கர்நாடக மாநிலத்தில் தலைமை நீதிபதியாக பொறுப்பு நீதிபதி ஒருவர் இருந்தார். அவர்தான் இந்த வழக்கில் ஏற்கனவே அரசு வழக்கறிஞராக இருந்த ஆச்சார்யா அவர்களின் பதவி விலகலை உடனடியாக ஏற்றுக் கொண்டார். ஆனால் பொறுப்பு தலைமை நீதிபதி அரசு ஏற்கனவே பரிந்துரை செய்த நான்கு வழக்கறிஞர்களிலிருந்து ஒருவரைத் தேர்ந்தெடுக்காமல், தன்னிச்சையாக இந்த பவானி சிங் என்பவரை அரசு வழக்கறிஞராக நியமித்தார்.

இந்த வழக்கின் விசாரண அதிகாரியாக இருந்த நல்லம்ம நாயுடுவுக்குப் பிறகு, இதனை விசாரித்த டி.எஸ்.பி.சம்பந்தம் என்பவர் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு ஆதரவாக ஆஜராகி சாட்சியம் அளித்தார். அப்போதும் அரசு வழக்கறிஞர் பவானி சிங் அதைக் கண்டு

கொள்ளவில்லை. ஒரு விசாரணை அதிகாரியை அதே வழக்கில் சாட்சியாக பதிவு செய்ய வேண்டுமென்றால், நீதிமன்றம்தான் அவரை சம்மன் செய்து அழைக்க வேண்டும். அந்தக் குறைந்தபட்ச நடைமுறைகூட இந்த வழக்கிலே பின்பற்றப்படவில்லை. கடைசி சாட்சியாக (99வது சாட்சி) டி.எஸ்.பி. சம்பந்தத்தை ரகசியமாகக் கொண்டு வந்து நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கச் செய்தார்கள். லஞ்ச ஒழிப்புத் துறையைச் சேர்ந்த இந்த அதிகாரி, குற்றம் சாட்டப்பட்டவர்களின் தரப்பு சாட்சியாக விசாரிக்கப்பட்டு, சாட்சி ஆவணங்களை குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு ஆதரவாகக் குறிப்பிடவும் அனுமதிக்கப்பட்டுள்ளார். பொறுப்பு விசாரணை அதிகாரி இப்படி சாட்சியம் அளித்ததற்கு தனது உயர் அதிகாரிகளின் அனுமதியைக்கூட முறையாகப் பெறவில்லை என்று கூறப்படுகிறது. இதற்கெல்லாம் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டிய அரசு வழக்கறிஞர் ஆட்சேபிக்கவில்லை. நீதிபதியும் அதை அனுமதித்திருக்கிறார்.

இதே பொறுப்பு விசாரணை அதிகாரிதான், அரசு வழக்கறிஞரை மீறி, நேரடியாக சிறப்பு நீதிபதிக்கு இந்த வழக்கு தொடர்பாக மறு விசாரணை செய்யப்பட வேண்டுமென்று முன்பு கடிதம் எழுதியவர். இதுகுறித்து கர்நாடக உயர் நீதி மன்றத்தில் நாம் தாக்கல் செய்த மனுவை, கர்நாடக உயர் நீதி மன்றம் ஏற்றுக் கொண்டு, டி.எஸ்.பி.. சம்மந்தத்தின் கோரிக்கையைத் நிராகரித்ததுடன், தமிழகத்தின் தற்போதைய முதல்வர்

செல்வி ஜெயலலிதா உத்தரவுப்படி செயல்படும் பொறுப்பு விசாரணை அதிகாரி சம்பந்தத்தையும் கண்டித்தது.

பவானி சிங் பொறுப்பேற்றவுடன் அரசு தரப்பு சாட்சிகளான 259 பேர், மற்றும் ஆயிரக்கணக்கான ஆவணச் சாட்சியங்களைப் படித்து தெரிந்து கொள்ள இரண்டு மாதம் அவகாசம் வேண்டுமென்று கோரி 28–2–2013 அன்று மனு தாக்கல் செய்தார். இதுநாள் வரை இந்த மனு மீது சிறப்பு நீதி மன்றம் எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை. அவர் கேட்ட அவகாசமும் தரப்படவில்லை. அதற்காக அவர் உயர் நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்யவே இல்லை.

இதையெல்லாம் கண்டபிறகு தான், இந்த வழக்கில் அரசு தரப்புடன் இணைந்து, ஜெயலலிதாவுக்கு எதிராக வாதாட எங்களை அனுமதிக்க வேண்டுமென்று கோரி சிறப்பு நீதி மன்றத்தில் தி.மு. கழகத்தின் சார்பில் வழக்கு தொடரப்பட்டது. ஆனால் நீதிபதி பாலகிருஷ்ணா எழுத்துப் பூர்வமாக உங்கள் கருத்துகளை எழுதித் தாக்கல் செய்யலாமே தவிர, வாதாட அனுமதியில்லை என்று தெரிவித்துவிட்டார். விசாரணை அதிகாரியாக இருந்த நல்லம்ம நாயுடுவை விசாரிக்க வேண்டுமென்ற கோரிக்கைக்கும் இது நாள் வரை பதில் இல்லை.

இந்த முக்கியமான வழக்கின் சான்றா வணங்களாக உள்ள கைப்பற்றப் பட்ட நகைகள்

சென்னை ரிசர்வ் வங்கியின் கருவூலத்தில் உள்ளது. சொத்துக் குவிப்பு வழக்கின் விசாரணையின்போது, அந்தச் சொத்துக்களான நகைகள் எல்லாம் நீதிமன்றத்தின் பொறுப்பிற்குக் கொண்டு வரப்படவேண்டும். அவ்வாறு இதுவரை கொண்டு வரப்படவில்லை. இறுதி வாதம் நடைபெறுவதற்கு முன்பாக, அந்த நகைகளை நீதிமன்றத்தில் ஒப்படைப்பது பற்றி சிறப்பு நீதி மன்றம் எந்தவிதமான உத்தரவும் பிறப்பிக்கவில்லை. அந்த நகைகளைக் கொண்டு வந்து விசாரணை நடத்துவதற்கு முன்பாகவே, இந்த வழக்கில் தீர்ப்பளித்துவிட வேண்டுமென்று நீதிபதி அவசரப்படுவது, அவர் தன் பதவி ஓய்வுக்கு முன்பாகவே தீர்ப்பளித்திட வேண்டும் என்று கருதினார் போலும்! நகைகளை நீதிமன்றத்திற்கே கொண்டு வந்து பார்வையிடாமல், இந்த வழக்கில் தீர்ப்பளிக்க முடியாது.

அரசு வழக்கறிஞர் பவானி சிங்கை மாற்ற வேண்டுமென்று கோரி கர்நாடக உயர் நீதி மன்றத்தில் 23–8–2013 அன்று பொதுச் செயலாளர் பேராசிரியர் மனு தாக்கல் செய்தார். 26–8–2013 அன்று கர்நாடக மாநில உயர் நீதிமன்ற நீதிபதி திரு. போபன்னா, கர்நாடக மாநில சட்டத் துறைக்கு நோட்டீஸ் அனுப்பினார். இந்தச் சொத்துக் குவிப்பு வழக்கினை பெங்களூரு சிறப்பு நீதி மன்றம் விசாரிக்க வேண்டுமென உத்தரவிட்ட உச்ச நீதி மன்றம், நியாயமான விசாரணை நடைபெறுவதை கர்நாடக உயர் நீதிமன்றம் உறுதி செய்ய வேண்டுமென்று

தெரிவித்திருந்தது. அதனால் தான் கர்நாடக மாநில உயர் நீதிமன்றம் கர்நாடக மாநில அரசுக்கு நோட்டீஸ் அனுப்பியது. அன்றையதினமே கர்நாடக மாநில அரசு, பவானிசிங் அவர்களை மாற்றி உத்தரவிட்டது.

கர்நாடக மாநில அரசு பவானி சிங் அவர்களை மாற்றி 26ஆம் தேதியே ஆணை பிறப்பித்த போதும், 27ஆம் தேதியன்று சிறப்பு நீதி மன்றத்தில் பவானி சிங் ஆஜராகி வாதிடுவதில் முனைப்பு காட்டினார். அவர் அவ்வாறு வாதிட்டுக் கொண்டிருக்கும் நேரத்திலேயே அவரை அந்தப் பதவியிலிருந்து கர்நாடக மாநில அரசு நீக்கிய ஆணை பற்றி நீதிபதிக்குத் தெரிய வந்து விட்டதால், நீதிபதி நீதிமன்ற நடவடிக்கைகளை அப்படியே நிறுத்தி விட்டு தன் அறைக்குச் சென்று விட்டார். அப்போது பவானி சிங் நீதிமன்றத்திலிருந்து வெளியேறி அ.தி.மு.க. வழக்கறிஞர்களுடன் ஆலோசனை நடத்தியிருக்கிறார். என்ன ஆச்சரியம் பாருங்கள்! புலியும் மானும் ஒரே இடத்தில் நீர் அருந்திய கதையைப் படித்தது இல்லையா? அதைப் போல, குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கான வழக்கறிஞர்களும், அவர்களை எதிர்த்து வாதிட வேண்டிய வழக்கறிஞரும் கூடி ஆலோசனை நடத்திய வேடிக்கையும் பெங்களூர் சிறப்பு நீதி மன்றத்திலே நடைபெற்றிருக்கிறது.

கர்நாடக மாநில அரசு பவானி சிங் அவர்களை மாற்றியிருக்கா விட்டால், 27ஆம் தேதியன்றே அரசு தரப்பின் வாதத்தை பவானி சிங் முடித்துவிட்டதாகத் தெரிவித்து, நீதிபதியும் தீர்ப்பிற்கான தேதியை அறிவித்திருப்பார்.

கர்நாடகாவுக்கு சொத்துக் குவிப்பு வழக்கு மாற்றப்பட்ட நாளிலிருந்து மனு மேல் மனு போட்டு வழக்கை இழுத்தடிப்பு செய்து வந்த குற்றம் சாட்டப்பட்டவர்கள் புதிய சிறப்பு நீதிபதியாக திரு. பாலகிருஷ்ணா நியமிக்கப்பட்ட பிறகு, இந்த வழக்கை விரைவில் முடிப்பதற்கான அத்தனை முயற்சிகளிலும் ஈடுபட்டார்கள். அதற்காகவே அரசுதரப்பு வழக்கறிஞர் இரண்டு மாத காலம் அவகாசம் வேண்டுமென்று கேட்டதைக் கூட அளிக்காமல், தன்னுடைய பதவி ஓய்வு நாளான செப்டம்பர் 30 ஆம் தேதிக்குள்ளாக இந்த வழக்கில் தீர்ப்பளிக்கும் அவசரத்துடன் செயல்பட்டதையும் புரிந்து கொள்ள முடிந்தது.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் தங்கள் தரப்பில் முதலில் 133 சாட்சிகளை விசாரிக்க வேண்டுமென்று கோரியிருந்தனர். ஆனால் 99 சாட்சிகளை மட்டும் விசாரித்து விட்டு, தங்களுடைய சாட்சிப் பட்டியலை திடீரென்று குறைத்துக் கொண்டனர். இந்த 99 சாட்சிகளிடமும்கூட, அரசு வழக்கறிஞரான பவானி சிங் முறையாக குறுக்கு விசாரணை செய்யவில்லை.

குற்றம் சாட்டப்பட்ட தரப்பு முக்கியமான ஆவணங்களை "ஜெராக்ஸ்" நகல் களாகக் கொடுத்த போதிலும், சிறப்பு நீதிபதி அதற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் தெரிவிக்காமல் பெற்றுக் கொண்டார். இது "ஒரிஜினல்" ஆவணங்களையே சமர்ப்பிக்க வேண்டும்

என்ற விதியை மீறியதாகும். "ஜெராக்ஸ்" நகல்களை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று எதிர்ப்பு தெரிவிக்க வேண்டிய அரசு வழக்கறிஞரும் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை.

அரசு வழக்கறிஞர் பவானி சிங் நீக்கப்பட்டதாக கர்நாடக மாநில அரசு ஆணை பிறப்பித்ததும், தனது பதவி நீக்கத்தை எதிர்த்து உச்ச நீதி மன்றம் செல்லப் போவதாக 28ஆம் தேதி பவானி சிங் அறிவித்த நிலையில், 29ஆம் தேதியன்று அரசு வழக்கறிஞர் நீக்கப்பட்டது நியாயமற்ற செயல் என்று குற்றம் சாட்டப்பட்ட ஜெயலலிதா சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. என்ன வேடிக்கை? எதிர் தரப்பு வழக்கறிஞரை மாற்றியது தவறு என்று ஜெயலலிதா தரப்பினர் உச்ச நீதிமன்றத்திற்கே சென்று விட்டார்கள். எதிர்தரப்பு வழக்கறிஞர் மாற்றத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து குற்றம் சாட்டப்பட்டவரே உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்த விநோதத்தை டெல்லியிலே உள்ள மூத்த வழக்கறிஞர்கள் எல்லாம் பார்த்து தங்களுக்குத் தாங்களே சிரித்துக் கொண்டார்களாம்!

உச்ச நீதிமன்றம் ஜெயலலிதா தாக்கல் செய்த இந்த வழக்கினை 30ஆம் தேதியன்றே விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உத்தரவிட்டது. அரசு வழக்கறிஞர் பவானிசிங் அவர்களை கர்நாடக மாநில அரசு நீக்கியதற்கு இடைக்காலத் தடைவிதிக்க வேண்டுமென்ற ஜெயலலிதாவின் கோரிக்கையை ஏற்று, தடை விதிக்க

மறுத்த உச்ச நீதிமன்றம், புதிய அரசு வழக்கறிஞரை அந்த இடத்திலே நியமிக்கவும் கூடாது என்று கூறியதுடன், அந்த மனு மீது கர்நாடக மாநில அரசின் கருத்தினை தெரிவிக்க வேண்டுமென்று நோட்டீஸ் அனுப்பியது.

6–9–2013 அன்று உச்ச நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது, கர்நாடக அரசு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், பவானி சிங்கின் நியமனமே சரியானது அல்ல என்பதால் அவரைத் திரும்பப் பெற முடிவு செய்வதாகவும், தலைமை நீதிபதியுடன் கலந்து புதிய வழக்கறிஞரை நியமனம் செய்யத் தயாராக இருப்பதாகவும் கூறினார். அதையேற்ற நீதிபதிகள், புதிய வழக்கறிஞரை கர்நாடக ஐகோர்ட்டின் தலைமை நீதிபதியுடன் ஆலோசனை நடத்தி நியமிக்க வேண்டும் என்று உத்தரவிட்டனர்.

10–9–2013 அன்று பவானி சிங் அவர்களுக்கே கர்நாடக மாநில அரசின் சார்பாக அதன் சட்டத் துறை செயலாளர் ஒரு கடிதம் அனுப்புகிறார். அந்தக் கடிதத்தில் குறிப்பாக, **"As the Government of Karnataka was of the view that your appointment was not made in accordance with the directions issued by the Supreme Court in that the requirement of consultation has not been complied with, the Government withdrew your appointment..... In the circumstances the Government is of the view**

that it would be appropriate that pending consideration of the matter by Hon'ble the Chief Justice, you do not insist upon appearing before the Court in the aforesaid case as Special Public Prosecutor" என்று தெரிவித்து விட்டது. அதாவது தங்களின் நியமனம் உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி அமையவில்லை என்று கர்நாடக அரசு கருதுவதால் தங்களின் நியமன உத்தரவை இந்த அரசு திரும்பப் பெற்றுக் கொண்டது; இப்போதுள்ள சூழ்நிலையில் தலைமை நீதிபதியின் முன்னால் புதிய வழக்கறிஞர் குறித்த நடவடிக்கை நிலுவையில் இருப்பதை மனதிலே கொண்டு, சிறப்பு அரசு வழக்கறிஞராக நீங்கள் ஆஜராக வேண்டும் என்பதை வலியுறுத்தக் கூடாது என்று அரசு கருதுகிறது என்று கர்நாடக அரசு கடிதமே எழுதியிருக்கின்றது.

10 ஆம் தேதி கர்நாடக அரசு இவ்வாறு திட்ட வட்டமாகத் தெரிவித்தவுடன், பவானி சிங் என்ன செய்வதென்று முடிவெடுப்பதற்குப் பதிலாக, ஜெயலலிதா தரப்பினர் முடிவெடுத்து விட்டார்கள். அதாவது இன்று (13–9–2013) மதியம் 1 மணி அளவில் உச்ச நீதிமன்றத்தில் பவானி சிங் இந்த வழக்கிலே ஆஜராகக் கூடாது என்று கர்நாடக மாநில அரசு எழுதியுள்ள கடிதத்திற்கு இடைக்காலத் தடை வழங்கிட வேண்டுமென்று ஜெயலலிதா கோரிக்கை மனு தாக்கல் செய்தார்.

பவானிசிங் அரசு வழக்கறிஞர் – ஜெயலலிதாவுக்கு எதிராக வாதாடுவதற்காக அரசால் நியமிக்கப்பட்டவர் – அவரே இந்த வழக்கில் நீடிக்க வேண்டுமென்று ஜெயலலிதா எதற்காகத் துடிக்கிறார்? உச்ச நீதிமன்றமும், ஜெயலலிதாவின் கோரிக்கையை ஏற்று, கர்நாடக மாநில அரசு பவானி சிங் அவர்களுக்கு எழுதிய கடிதத்திற்கு இடைக்காலத் தடை பிறப்பித்துள்ளது. ஜெயலலிதா தரப்பிலே அதற்காக எடுத்து வைத்த வாதம் என்ன? அதைப் பற்றியெல்லாம் பின்னர் எழுதுகிறேன்.

உச்ச நீதிமன்றத்தின் இடைக்காலத் தடை காரணமாக, இந்த வழக்கு சிறப்பு நீதி மன்றத்தில் 17ஆம் தேதியன்று விசாரணைக்கு வரவிருக்கிறது. இதற்கிடையே பவானி சிங் அவர்கள் வாதாடக் கூடாது என்று கர்நாடக உயர் நீதிமன்றத்தில் கழகத்தின் சார்பில் தொடுத்த வழக்கின் விசாரணை 16ஆம் தேதியன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது.

எப்படியோ கர்நாடக மாநில சிறப்பு நீதிமன்ற நீதிபதி பாலகிருஷ்ணா இந்த மாதம் 30ஆம் தேதியோடு ஓய்வு பெறவிருக்கிறார். அதற்குள் இந்த வழக்கிலே தீர்ப்பு வழங்கப்பட வேண்டுமென்று குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் கருதுகிறார்கள். நீதிபதி அவர்களும் தான் ஓய்வு பெறுவதற்குள் தீர்ப்பு வழங்க வேண்டுமென்று கருதினார். இதிலே இடையிலே ஒரு சிக்கல். சிறப்பு நீதிமன்ற நீதிபதியின் பிறந்த நாள்படி அவர் இந்த மாதம் 12ஆம் தேதியோடு ஓய்வு பெற்றிருக்க வேண்டும்.

மாதத்தின் மத்தியில் யாராவது ஓய்வு பெற நேரிட்டால், அவர்கள் ஓய்வூதியம் பெறுவதற்கு ஏதுவாக, அந்த மாதக் கடைசி வரையிலே தொடர்ந்து பணியாற்றலாம் என்று அரசு அளித்த சலுகை காரணமாக, நீதிபதி பாலகிருஷ்ணா செப்டம்பர் 30ஆம் தேதி வரை பணியாற்றலாம். ஆனால் அவர் இயற்கையாக ஓய்வு பெற வேண்டிய 12ஆம் தேதிக்குப் பிறகு, இந்த மாதம் 30ஆம் தேதி வரை அவர் பணியாற்றினாலுங்கூட, முக்கிய தீர்ப்புகளை அவர் வழங்கக் கூடாது என்பது நீதிமன்ற மரபு. அதன்படி அவர் 30ஆம் தேதிவரை நீதிபதியாக பணி நீடித்தாலும், இனிமேல் அவரால் இந்த வழக்கிலே தீர்ப்பு வழங்கிட இயலாது என்பது தான் உண்மை. இதையும் மீறி சிறப்பு நீதிமன்ற நீதிபதி வழக்கினை நடத்துவாரா என்பது கேள்விக் குறி!

பேரறிஞர் அண்ணா அவர்கள் "நீதி தேவன் மயக்கம்" என்று ஒரு புகழ் பெற்ற நாடகம் எழுதினார். அதில் அண்ணா அவர்களே நடிப்பார். அதைப்போல இந்தச் சொத்துக் குவிப்பு வழக்கிலும் நீதி தேவன் மயக்கம் அடையப் போகிறாரா? நிமிர்ந்து நிற்கப் போகிறாரா? நீதி தேவன் மயக்கம் அடைந்தாலும், உண்மையான நீதிபதிகளாகிய தமிழ் நாட்டு மக்கள் முன்பாக இந்த வழக்கின் இறுதிக் கட்டத்தில் உள்ள நிலைமைகளை எடுத்து வைத்திருக்கிறேன்.

"முரசொலி"
14–9–2013.

அன்புள்ள,
மு.க.

அனைவரும் கேட்கிறார்கள்; ஆளுவோர் பதில் என்ன?

(கலைஞர் பதில்கள் – 20.9.2013)

கேள்வி :– ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கில், அவருக்கு எதிராக வாதாட வேண்டிய வழக்கறிஞர் பவானி சிங் அவர்களே, அந்தப் பதவியில் நீடிக்க வேண்டுமென்று குற்றம் சாட்டப்பட்ட ஜெயலலிதாவே திரும்பத் திரும்ப பல முயற்சிகளில் ஈடுபடுகிறாரே?

கலைஞர்:- கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் சார்பில் 23–8–2013 அன்று கர்நாடக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், சொத்துக் குவிப்பு வழக்கில் அரசு சார்பில் ஆஜராகும் வழக்கறிஞர் குற்றவாளிகளுக்கு ஆதரவாகவும், விசாரணையின்போது பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகளுக்கு எதிராகவும் செயல்படுவதால், அவரை நீக்கிவிட்டு புதிய வழக்கறிஞரை, அரசு வழக்கறிஞராக நியமனம் செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைக்கப் பட்டது.

அந்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதி ஏ.எஸ். போபண்ணா, கர்நாடக அரசுக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பினார்.

இதற்கிடையில், அரசு வழக்கறிஞர் பதவியிலிருந்து பவானி சிங்கை நீக்கிவிட்டதாக, கர்நாடக மாநிலச் சட்டத் துறைச் செயலாளர் நாகராஜா 25–8–2013 அன்று உத்தரவிட்டார். இந்த உத்தரவை ரத்து செய்யக்கோரி தமிழக முதல்வர் ஜெயலலிதா சார்பில் உச்ச நீதிமன்றத்தில் "ரிட்" மனு தாக்கல் செய்யப்பட்டது.

நீதிபதிகள் சவுஹான் மற்றும் போப்படே ஆகியோர் முன்பு விசாரணை நடைபெற்றபோது, நீதிபதிகள், புதிய வழக்கறிஞரை நியமனம் செய்ய அனுமதி வழங்கியதுடன், ஜெயலலிதா சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவைத் தள்ளுபடி செய்து, 7–9–2013 அன்று உத்தரவிட்டனர்.

சொத்துக் குவிப்பு வழக்கில் பவானிசிங் அரசு சார்பாக ஆஜராக வலியுறுத்த வேண்டாம் என்று 10–9–2013 அன்று கர்நாடக அரசு கூறியது. அதை எதிர்த்து ஜெ. தரப்பில் மீண்டும் உச்ச நீதிமன்றத்தில் 11ஆம் தேதி மனுத் தாக்கல் செய்யப்பட்டது. கர்நாடக அரசின் உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை உச்ச நீதிமன்றம் ஏற்று, பவானி சிங் விசாரணையில் ஆஜராகக் கூடாது என்று பிறப்பித்த உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதித்தது.

இதற்கிடையில் கர்நாடக அரசு வெளியிட்ட அரசாணையில், சொத்துக் குவிப்பு வழக்கி லிருந்து வக்கீல் பவானி சிங்கை கர்நாடக உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி

ஒப்புதலோடு முறைப்படி நீக்கம் செய்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில்தான் தற்போது ஜெயலலிதா உச்ச நீதிமன்றத்தில் புதிதாக இரண்டு மனுக்களை நேற்றையதினம் (18–9–2013) தாக்கல் செய்திருக்கிறார். அதாவது, தற்போது ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு வழக்கை விசாரித்து வரும் நீதிபதி பாலகிருஷ்ணா அவர்களே தொடர்ந்து விசாரிக்க அனுமதிக்க வேண்டுமென்றும், புதிய நீதிபதியை நியமிக்க இடைக்காலத் தடை விதிக்க வேண்டுமென்றும், பவானி சிங்கை நீக்கி கர்நாடக அரசு பிறப்பித்த ஆணையை ரத்து செய்ய வேண்டுமென்றும் ஜெயலலிதா உச்ச நீதி மன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருக்கிறார்.

நீதிபதி பாலகிருஷ்ணா அவர்கள் இந்த வழக்கு விசாரணையை மேற்கொள்வதற்கு முன்பு திரு.மல்லிகார்ஜுனய்யா அவர்களும், வேறு சிலரும் நீதிபதிகளாக இருந்தபோது, அவர்களே தொடர்ந்து இந்த வழக்கை விசாரிக்க வேண்டுமென்று கேட்காத ஜெயலலிதா, தற்போது மட்டும் திரு. பாலகிருஷ்ணா அவர்களே தொடர்ந்து இந்த வழக்கினை விசாரிக்க வேண்டுமென்று கோரிக்கை வைப்பது ஏன்? அதுபோலவே அரசு வழக்கறிஞராக திரு. ஆச்சார்யா அவர்கள் பதவி விலகியபோது, அவர் பதவி விலக வேண்டாமென்றும், தொடர்ந்து அந்த வழக்கிலே அரசு வழக்கறிஞராக நீடிக்க வேண்டுமென்றும் ஜெயலலிதா தரப்பில் கோரிக்கை வைக்காதது ஏன்?

எங்கேயாவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா? குற்றவாளியே தன்மீதான வழக்கை குறிப்பிட்ட நீதிபதிதான் தொடர்ந்து விசாரிக்க வேண்டுமென்றும், தனக்கு எதிராக வாதாடக்கூடிய அரசு வழக்கறிஞராக குறிப்பிட்ட ஒருவரே இருக்க வேண்டுமென்றும் கோரிக்கை வைக்கும் விநோதம் இதுவரை எந்த வழக்கிலாவது நடந்தது உண்டா?

கேள்வி :– சென்னையில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட பார்வையற்ற பட்டதாரிகள் 200 பேர் கைது செய்யப்பட்டதாகச் செய்தி வந்திருக்கிறதே?

கலைஞர் :- பார்வையற்ற கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் சங்கத்தினர் ஒன்பது அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த மூன்று நாட்களாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். போராட்டத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் தமிழக முதலமைச்சரைச் சந்தித்து தங்களது குறைகளைத் தெரிவிக்கக்கூட அனுமதி மறுக்கப்படுகிறதாம்.

இதுகுறித்து பார்வையற்ற பட்டதாரிகள் மற்றும் கல்லூரி மாணவர் சங்கத் தலைவர் நாகராஜன் என்பவர், "ஒவ்வொரு ஆண்டும், மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக பல கோடி ரூபாய் செலவிடப்படுவதாக அரசு கூறுகிறது. ஆனால் மடக்கு குச்சிகள், கண்ணாடி போன்றவற்றை வழங்கியதைத் தவிர்த்து, வேறு எதையும்

நடைமுறைப்படுத்தவில்லை. கடந்த ஆண்டு, மாற்றுத் திறனாளி நலத் துறைக்குக் கமிஷனராக நியமிக்கப்பட்ட ஐ.ஏ.எஸ். அதிகாரி, மாற்றுத் திறனாளிகள் நலனில் அக்கறை செலுத்தவில்லை. பணியில் அக்கறை செலுத்துவதில்லை. அதனால் மற்ற அதிகாரிகளும் அக்கறையோடு பணிபுரிவதில்லை. தமிழகத்தில் உள்ள, நூற்றுக்கணக்கான சங்கங்கள், நாங்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகளை வலியுறுத்திப் போராட்டம் நடத்தினர். இதுவரை எந்த நடவடிக்கையுமில்லை. வேறு வழியின்றி தெருவில் இறங்கிப் போராட வேண்டிய நிலைமைக்கு ஆளாகினோம். எங்கள் நலனுக்கான செயல்பாடுகளில் முறையாகச் செயல்பட்டிருந்தால், மாற்றுத் திறனாளிகள் எப்போதோ முன்னேற்றம் அடைந்திருப்பார்கள்" என்றெல்லாம் கூறி, அது "தினமலர்" நாளேட்டிலேயே இன்று (19–9–2013) வெளிவந்துள்ளது.

"ஊனமுற்றோர்" என்று அழைக்கப்பட்டு வந்தவர்களை "மாற்றுத் திறனாளிகள்" என்று நான்தான் முதன் முதலில் தமிழகத்திலே அறிவித்ததோடு, "மாற்றுத் திறனாளிகளுக்கான தனித் துறை ஒன்று முதலமைச்சரின் நேரடி மேற்பார்வையில் இயங்கும்" என்றும் நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திடச் செய்தேன். அவ்வாறே 27–3–2010 முதல் அந்தத் துறை செயல்பட்டு வருகிறது. தி.மு. கழக ஆட்சியில் மாற்றுத் திறனாளிகள் சென்னை ராஜீவ் காந்தி பொது மருத்துவமனையில் உண்ணாவிரதப்

போராட்டம் நடத்துவதாக காலை ஏடுகளில் செய்தியைப் படித்துவிட்டு, காலை உணவுகூட அருந்தாமல் அப்படியே கீழே இறங்கி காரில் ஏறி, நேராக அவர்கள் போராட்டம் நடத்திய இடத்திற்கே சென்று அவர்களின் கோரிக்கைகள் உடனடியாக ஏற்கப்படும் என்று கூறி போராட்டத்தை நிறுத்தச் செய்தவனும் நான்தான்.

தி.மு. கழக ஆட்சியில்தான் மாற்றுத் திறனாளிகள் நல வாரியம் ஒன்று 26–4–2010 அன்று தொடங்கப்பட்டது. "இளைஞன்" என்ற திரைப்படத்திற்கு கதை வசனம் எழுதியதற்காக எனக்குக் கிடைத்த 45 இலட்சம் ரூபாயை மாற்றுத் திறனாளிகளின் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்காக அளித்திட வழிவகை செய்யப்பட்டது. மாற்றுத் திறனாளிகளுக்காக கழக ஆட்சியில் செய்யப்பட்ட சாதனைகளின் பட்டியல் மிக நீளமானது. மாற்றுத் திறனாளிகள் நலனுக்கென அ.தி.மு.க. ஆட்சியில் 2005–2006ஆம் ஆண்டில் 49 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு மட்டுமே செய்யப்பட்டிருந்தது. 2010–2011ஆம் ஆண்டில் தி.மு. கழக ஆட்சியில் ஒதுக்கப்பட்ட நிதி 176 கோடி ரூபாய். மாற்றுத் திறனாளிகள் மறந்து விடுவார்களா என்ன?

கேள்வி :– திருச்சி விமான நிலையத்திற்கு தந்தை பெரியார் அவர்களின் பெயரைச் சூட்ட வேண்டுமென்று தமிழர் தலைவர் கி. வீரமணி வேண்டுகோள் விடுத்திருக்கிறாரே?

கலைஞர் :- திராவிட முன்னேற்றக் கழகம் இந்த வேண்டுகோளை முழு மனதோடு ஆதரிக்கின்றது. மத்திய அரசு உடனடியாக இந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இந்த வேண்டுகோளை கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களவையிலும், மாநிலங்களவையிலும் முன்வைத்து வாதிட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

கேள்வி :– சேது சமுத்திரத் திட்டத்திற்கு தடை விதிக்கக்கோரி தொடரப்பட்ட வழக்கில், மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தில் பதில் மனுவினைத் தாக்கல் செய்திருக்கிறதே ?

கலைஞர் :- தமிழ்நாட்டிற்கு நலன் பயக்கக் கூடிய சேது சமுத்திரத் திட்டத்துக்குத் தடை விதிக்கும்படி வலியுறுத்தியும், ராமர் பாலத்தை தேசியப் புராதனச் சின்னமாக அறிவிக்க உத்தரவிடக்கோரியும், தமிழக அரசும், வேறு சில மதவாத அமைப்புகளும் உச்ச நீதிமன்றத்தில் கடந்த ஏப்ரல் மாதத்தில் வழக்குத் தொடர்ந்தன. உச்ச நீதிமன்றம், மத்திய அரசினை இதற்குப் பதில் அளிக்கும்படி நோட்டீஸ் அனுப்பியது. அதற்குத்தான் மத்திய அரசு பதில் மனு தாக்கல் செய்திருக்கிறது.

அந்த மனுவில், "சேது சமுத்திரத் திட்டத்தைச் செயல்படுத்தினால், கடல் வழிப் போக்குவரத்தின் மூலம் ஏற்படும் சமூகப் பொருளாதார மேம்பாட்டைக் கருத்திலே

கொண்டு, ராமர் பாலத்தை தேசியப் புராதனச் சின்னமாக அறிவிக்கும் தமிழக அரசின் கோரிக்கை ஏற்கப்படவில்லை. சேது சமுத்திரத் திட்டத்தை மாற்றுப் பாதையில் செயல்படுத்த வாய்ப்பும் இல்லை. எனவே பழைய வழித் தடத்திலேயே திட்டம் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்தின் சாதக பாதகங்களை ஆய்வு செய்வதற்காக 2007ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட வல்லுனர் குழு; ராமர் பாலம் பகுதியில் தொல்லியல் துறை ஆய்வுகள் எதையும் மேற்கொள்ளவில்லை என்று குறிப்பிட்டுள்ளது. மேலும் அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் ரீதியாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு சாத்தியமில்லை என்பதற்கான ஆதாரங்கள் எதையும் "பச்சோரி குழு" அறிக்கையில் தெரிவிக்கவில்லை. பச்சோரி குழுவின் அறிக்கை தவறானது. 2067 கோடி ரூபாய்ச் செலவில் உருவான இந்தத் திட்டத்திற்கு கடந்த 2005ஆம் ஆண்டு முதல் 2008ஆம் ஆண்டு வரை ரூ. 767 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. இதுபோன்ற காரணங்களால் பச்சோரி குழு அறிக்கையை ஏற்க முடியாது" என்று மத்திய அரசு பதில் சொல்லியிருக்கிறது.

மத்திய அரசு இத்தகைய பதில் மனுவைத் தாக்கல் செய்ய முன்வந்திருப்பதை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். உச்ச நீதிமன்றம் மதவாதச் சக்திகளின் முயற்சிகளுக்கு இடம் தராமல், தென்னகத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவிகரமாக இருக்கும் சேது சமுத்திரத் திட்டத்தைத் தொடர்ந்து நிறைவேற்றுவதற்கு வழிவகை செய்திடும் என்று தமிழர்கள் நம்பி எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

கேள்வி :– காவல் துறை, தீயணைப்புத் துறைக்குச் சொந்தமான புதிய கட்டிடங்களை முதலமைச்சர் ஜெயலலிதா காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்ததாக ஏடுகளில் எல்லாம் செய்தி வந்திருக்கிறதே ?

கலைஞர் :- நான் கடந்த 6–9–2013 அன்று எழுதிய "உடன்பிறப்பு மடலில்" "அ.தி.மு.க. ஆட்சியில் சென்னை மாநகரில் முத்தியால் பேட்டை காவல் நிலையம் – உபயோகத்தில் இல்லாத – மாநகராட்சிப் பள்ளி ஒன்றிலே நடைபெறுவதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. கடந்த மூன்றாண்டுக் காலமாக முத்தியால் பேட்டை காவல் நிலையம் இந்தப் பள்ளியிலேதான் செயல்பட்டு வருகிறது. ஆனால் முத்தியால் பேட்டை காவல் நிலையத்திற்காக ஒரு புதிய கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. ஆனால் அதனைத் திறந்து வைப்பதற்கு முதலமைச்சர் ஜெயலலிதாவின் தேதிக்காகக் காத்திருக்கிறதாம். தற்போது காவல் நிலையம் நடைபெறும் இரண்டு மாடிப் பள்ளிக் கட்டிடம் பொதுப்பணித் துறையினரால் ஆபத்தானது என்று கூறப்பட்டது. ஆனால் அங்கேதான் மக்களின் உயிர்களைக் காப்பாற்ற வேண்டிய காவல் துறையினர் பணியாற்றி வருகிறார்களாம். இந்தக் காவல் நிலையத்திற்கான மூன்று மாடி புதிய கட்டிடம், ஓராண்டு காலமாக பணி முடிந்த நிலையில் பூட்டப்பட்டுக் கிடக்கிறது. 80 லட்சம் ரூபாய்ச் செலவில் கட்டப்பட்ட இந்தக் கட்டிடத்தில் 30 அறைகள் இருக்கிறதாம். என்னுடைய இந்தக் கருத்துக்குப் பிறகாவது முதலமைச்சர் ஜெயலலிதா

பிரதமருக்கு அன்றாடம் கடிதம் எழுதுவதோடு, ஐந்து நிமிட நேரத்தை ஒதுக்கி, "வீடியோ கான்பரன்ஸ்" மூலமாகமாவது இந்தக் காவல் நிலையக் கட்டிடங்களைத் திறந்து வைக்க முன்வருவார் என்று எதிர்பார்க்கிறேன்" என்றெல்லாம் எழுதியிருந்தேன். அதைப்போலவே செம்பியம் காவல் நிலையக் கட்டிடமும் திறக்கப்படாத நிலையில் இருப்பதையும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன்.

என்னுடைய அந்தக் கடிதத்திற்கு நல்ல விளைவு ஏற்பட்டுள்ளது என்று நினைக்கிறேன். என்னுடைய அந்தக் கடிதத்தின் தொடர்ச்சியாகவோ என்னவோ 17-9-2013 அன்று காணொலிக் காட்சி மூலம் காவல் நிலையக் கட்டிடங்களை முதலமைச்சர் திறந்து வைத்ததாக அரசு செய்திக் குறிப்பு வெளிவந்துள்ளது. திறக்கப்பட்ட கட்டிடங்களின் பட்டியலைப் பார்த்த போது, "சென்னை மாநகரில் செம்பியம் மற்றும் முத்தியால்பேட்டை காவல் நிலையக் கட்டிடங்கள்" என்று இருப்பதைப் பார்த்து, நாம் கடிதம் எழுதிய பிறகுதான், ஏற்கனவே கட்டப்பட்டு, முதலமைச்சரின் தேதிக்காகக் காத்திருந்த கட்டிடங்களுக் கெல்லாம் "நல்ல காலம் பிறந்திருக்கிறது" என்று எண்ணிக் கொண்டேன். மேலும் அதே நிகழ்ச்சியில் 49 காவல் நிலையங்களுக்கான கட்டிடங்களையும், 1152 காவல் துறை குடியிருப்புகளையும் மற்றும் தீயணைப்புத் துறைக்கான கட்டிடங்களையும் முதல் அமைச்சர் திறந்து வைத்திருக்கிறார். அதிலிருந்து இத்தனை கட்டிடங்களும்

கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்படாமல் இருந்திருக்கின்றன என்பதையும் தெரிந்துகொள்ள முடிந்தது. முதல் அமைச்சர் ஒருநிமிட நேரம் ஒதுக்கி, காணொலியின் மூலம் திறந்து வைப்பதற்காக நேரம் அளிக்காத காரணத்தால், எத்தனை கட்டிடங்கள் திறக்கப்படாமல் இருந்திருக்கின்றன என்பதை இதனைப் படிப்பவர்கள் புரிந்து கொண்டால் போதும்!

கேள்வி :– அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்களில் 600 ஆசிரியர்கள் காலிப் பணி இடங்களை நிரப்ப வலியுறுத்தி உண்ணாவிரதம் இருப்பதாக ஒரு செய்தி வந்திருக்கிறதே?

கலைஞர் :- கடந்த மாதம் தமிழ்நாட்டில் புதிதாக ஐந்து இடங்களில் தொழிற்பயிற்சி நிலையங்களைத் தொடங்க முதலமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டிருப் பதாகச் செய்தி வந்தது. அப்போதே தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறுவோருக்கு என்னென்ன வசதிகள் செய்து தரப்பட்டன என்பது பற்றி ஒரு சிறு குறிப்பு தருவதாகத் தெரிவித்து, தி.மு. கழக ஆட்சியில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் என்னென்ன வசதிகள் செய்து தரப்பட்டன என்பதைப் பற்றி விரிவாகக் குறிப்பிட்டிருந்தேன்.

முதலமைச்சர் ஜெயலலிதா ஐந்து இடங்களில் தொழிற் பயிற்சி நிலையங்களைத் தொடங்க உத்தரவிட்டிருப்பதாகச் செய்தி வந்து ஒரு மாதம் தான் ஆகிறது. தமிழகம் முழுவதும் 62 அரசு தொழிற்பயிற்சி

நிலையங்களும், 652 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் இயங்கி வருகின்றன. அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் ஆண்டுதோறும் 60 ஆயிரம் மாணவர்கள் சேருகிறார்கள். இவர்களுக்காக 1,600 ஆசிரியர் கள் பணி அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இதிலே தான் 600 பணி இடங்கள் காலியாக இருப்பதாக வும், அதன் காரணமாக 70 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற அடிப்படையில் பாடம் நடத்த வேண்டிய நிலைமை இருப்பதாகவும் அந்தக் காலிப் பணி இடங்களை நிரப்ப வேண்டியும், மேலும் பல கோரிக்கைகளை வலியுறுத்தியும் தமிழ்நாடு தொழில் பயிற்சி அலுவலர் சங்கத்தின் சார்பில் உண்ணாவிரதம் தொடங்கியிருப்பதாகச் செய்தி வந்துள்ளது. தமிழக அரசு உடனடியாக அவர்களை அழைத்துப் பேசி, அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற ஆவன செய்ய வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு 600 காலிப் பணி இடங்களை நிரப்பாத நிலையில்தான், ஐந்து இடங்களில் புதிய தொழிற் பயிற்சி நிலையங்களைத் திறக்கப்போவதாகவும், அதன் மூலம் வருங்காலத்தில் தொழில் திறன் வாய்ந்த மனித வளம் அதிகரிப்பதற்கு வழிவகை ஏற்படும் என்றெல்லாம் அ.தி.மு.க. அரசின் செய்திக்குறிப்பிலே தெரிவித்தார்கள்.

கேள்வி :– ஹெராயின் போதைப் பொருளை வீட்டிலே வைத்திருந்ததாக ஜெயலலிதா ஆட்சி யில் 2001ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்ட ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் சுதாகரனை சென்னை சிறப்பு நீதிமன்றம் விடுதலை செய்திருப்பது பற்றி?

கலைஞர் :- ஜெயலலிதாவுடன் இருக்கும் சசிகலாவின் அக்காள் மகன்தான் சுதாகரன். இவரது திருமணத்தை ஜெயலலிதா தன்னுடைய வளர்ப்பு மகன் என்ற முறையில் பல கோடி ரூபாய் செலவு செய்து சென்னையில் ஆடம்பரமாக நடத்தினார் என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் நன்றாகவே அறிவார்கள். இவர் யாரோ ஒருவரைத் துப்பாக்கியைக் காட்டி மிரட்டினார் என்று புகார் வந்தது என்பதற்காக 2001ஆம் ஆண்டு இவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. 13–6–2001 அன்று இவர் வீட்டை போலீசார் சோதனை செய்த போது 16 கிராம் ஹெராயின் கைப்பற்றப்பட்டதாகக் கூறி, போலீசார் விசாரணை மேற்கொண்டார்கள். இவரையும், இவரது நண்பரையும் கைது செய்தார்கள். இந்த வழக்கு 2001ஆம் ஆண்டு முதல் 12 ஆண்டுகளாக நடைபெற்றது. 18–4–2013 அன்று இந்த வழக்கை விசாரித்த நீதிபதி டி.ராமமூர்த்திக்கு கொலை மிரட்டல் வந்ததால் வேறு நீதிபதி விசாரணைக்கு ஐகோர்ட் உத்தரவிட்டது. இந்த வழக்கில்தான் சுதாகரனையும், நண்பர்களையும் கடந்த 16ஆம் தேதி நீதிமன்றம் விடுதலை செய்திருக்கிறது. நீதிபதி சின்னப்பன் அவர்கள் தனது தீர்ப்பில், "வழக்கில் முக்கிய சாட்சியாகக் கருதப்படும் கோபு ஸ்ரீதரை அரசுத் தரப்பில் சாட்சியாக விசாரிக்கவில்லை. அதற்கான காரணத்தையும் அரசுத் தரப்பு கூறவில்லை. அவரிடம் இரண்டு புகார்கள் பெறப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. அவரிடம் விசாரணை நடத்தினால் அவர் புகார்

கொடுத்தாரா அல்லது அவரிடம் புகார் வாங்கப்பட்டதா என்று தெரிந்திருக்கும். அவரை விசாரிக்காததால் அவர் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. சுதாகரன் வீட்டில் எடுக்கப்பட்டது ஹெராயின் தான் என்று எப்படி உறுதிப்படுத்தப்பட்டது என்று போலீஸ் தரப்பில் கூறப்படவில்லை. சோதனை செய்வதற்கு முன்பு அருகில் உள்ள மாஜிஸ்திரேட் நீதிமன்றத்திலோ அல்லது அரசிதழில் பதிவு பெற்ற அதிகாரியிடமோ அழைத்துச் சென்று சோதனை செய்ய வேண்டும். இதை சம்பந்தப்பட்ட இன்ஸ்பெக்டர் செய்யவில்லை. தனிப்பட்ட சாட்சிகளையும் சேர்க்கவில்லை.

கைப்பற்றப்பட்ட பொருளை எடை போட தராசு கொண்டு செல்லவில்லை. அருகில் உள்ள கடையிலிருந்து தராசும் எடைக்கற்களும் வாங்கிச் சென்றதாகக் கூறப்பட்டது. ஆனால் அந்தக் கடையில் கடந்த 25 ஆண்டாக எலெக்ட்ரானிக் தராசுதான் பயன் படுத்தப்பட்டு வருகிறது என்று அரசு சாட்சியத்தில் கூறப்பட்டுள்ளது.

சுதாகரன் உள்ளிட்டோர் மீது வழக்குப் போட வேண்டும் என்ற நோக்கத்தில் செயல்பட்டு, தனிப்பட்ட நபர்கள் முன்னிலையில் சோதனை மேற்கொண்டு, கற்பனையான பெயர்களைக் குறிப்பிட்டு ஆவணங்கள் தயார் செய்துள்ளதாகத் தெரிகிறது. எனவே இந்த வழக்கில் குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்

படவில்லை என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது” என்றெல்லாம் நீதிபதி தெரிவித்திருக்கிறார்.

நீதிபதியின் இந்தத் தீர்ப்பிலிருந்து இந்த வழக்கு வேண்டுமென்றே போடப்பட்ட வழக்கு என்று தெரிகிறதா இல்லையா? அப்படியானால் இவ்வாறு வழக்குப் போடத் தூண்டியது யார்? அதற்குத் துணையாக இருந்தது யார்? அவர்கள் மீது என்ன நடவடிக்கை? அனைவரும் கேட்கிறார்கள்; ஆளுவோர் பதில் என்ன?

***

நீவிர், வீட்டுக்கு விளக்குகள்; நாட்டுக்குத் தொண்டர்கள்!

உடன்பிறப்பே,

14.9.2013 அன்று சென்னையில் "அன்பகத்தில்" கழகப் பொருளாளர், தளபதி தம்பி மு.க.ஸ்டாலின் தலைமையில் கழக இளைஞர் அணியின் மாநில, மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கூட்டம் நடைபெற்று, நான்கு முக்கியத் தீர்மானங்களை நிறைவேற்றி, அவை ஏடுகளில் வெளிவந்திருப்பதை நீ படித்து அறிந்திருப்பாய்!

அந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட முதல் தீர்மானம் – "பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் பிறந்தநாள், அறிவுலக மேதை அறிஞர் அண்ணா பிறந்தநாள், தமிழ் இனத்தின் நம்பிக்கை நட்சத்திர மாய்த் திகழும் திராவிட முன்னேற்றக் கழகம் உதயமான நாள் ஆகியவை இணைந்த "முப்பெரும் விழா" தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையில் ஆண்டுதோறும் எழுச்சியோடு நடைபெற்று வருகிறது. இவ்விழாவின் தொடர்ச்சியாக தி.மு.க. இளைஞர் அணியின் சார்பில் தமிழகமெங்கும் பட்டிதொட்டிகள் தோறும் கழகத்தின்

தங்கநிகர் கொள்கைகளையும், தமிழக மக்களின் எதிர்கால நலன்களைக் கருத்தில் கொண்டு தலைவர் கலைஞர் அவர்களால் நிறை வேற்றப்பட்ட மக்கள்நலத் திட்டங்களையும் மக்களிடையே விளக்கிடுவதோடு, நிர்வாகத் திறனற்ற ஜெயலலிதா ஆட்சியில் தமிழகத்தில் நிலவும் சட்டம் ஒழுங்குச் சீர்குலைவு, எங்கு நோக்கினும் கொலை, கொள்ளை, வழிப்பறி, வன்முறை, கற்பழிப்பு, மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வு, மின்வெட்டு, வேலையில்லாத் திண்டாட்டம் என அனைத்துத் தரப்பினரையும் வேதனைக்கு உள்ளாக்கி வரும் அ.தி.மு.க. ஆட்சியின் அவலங்களைப் பட்டியலிட்டு அவற்றை எளியமுறையில் அச்சிட்டு, கிராமங்கள், குக்கிராமங்கள், நகரங்கள், வார்டுகள் என அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று வீடுவீடாக விநியோகிப்பதோடு, ஆங்காங்கே திண்ணைப் பிரச்சாரம் எனப் பல்வேறு கோணங்களில் வியூகம் அமைத்துச் செயலாற்றிட இன்றே திட்டமிட்டு, பிரச்சாரப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமென இக்கூட்டம் கேட்டுக் கொள்வதோடு, முதற்கட்டப் பிரச்சாரப் பணிகளை 24.9.2013 ஆம் தேதி முதல் 30.9.2013 ஆம் தேதி வரை தொடர்ந்து ஒரு வார காலத்திற்கு, தமிழகம் முழுவதும் நடத்திட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்களை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது” என்பதாகும்.

தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் தொடர்ச்சியாக இளைஞர் அணியின் சார்பாக ஒவ்வொரு மாவட்டத்திலும் கலந்து கொண்டு உரையாற்றவுள்ள கழகச் சொற்பொழிவாளர்களின் பெயர்ப் பட்டியலும் இளைஞர் அணியின் செயலாளர் தம்பி ஸ்டாலினால் ஏற்கனவே வெளியிடப்பட்டுவிட்டது. மாவட்ட இளைஞர் அணியின் அமைப்பாளர்கள் அந்தப் பட்டியலிலே உள்ள பெயருக்குரியவர்களைத் தொடர்பு கொண்டு எந்தெந்தத் தேதிகளில் நிகழ்ச்சிகள் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன, பேச்சாளர்கள் எப்போது வருகிறார்கள், எத்தனை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்கள் என்ற விவரங்களையெல்லாம் தொலைபேசி வாயிலாகப் பேசி வருவது என் கவனத்திற்கு வந்தது.

எந்தெந்த ஊர்களில், யார் யார் பேச்சாளர்கள், அவர்கள் எத்தனை மணிக்கு வருவார்கள் என்ற தகவல்களையெல்லாம் நேற்றையதினம் தம்பி ஸ்டாலின் அன்பகத்தில் அமர்ந்து மாவட்டவாரியாக பட்டியலாகத் தயாரித்து இன்றைய முரசொலியில் வெளியிட்டுள்ளார். அதுவே எட்டு மாவட்டங்களுக்குத்தான் முடிவடைந்துள்ளது. மற்ற மாவட்டங்களுக்குத் தொடர்ந்து வெளிவரும். இந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவிருக்கின்ற பேச்சாளர்கள், கழகத்தின் மூத்தப் பேச்சாளர்கள் அல்ல; சில வளர்ந்த பேச்சாளர்களும், சில வளருகின்ற பேச்சாளர்களும் இந்தத் தெருமுனைப் பிரச்சாரத்தில் கலந்து கொள்ள விருக்கிறார்கள். அவர்களுக்கு ஊக்கமும், ஆக்கமும் தரவேண்டியது கழகத்தவர் கடமை.

பேச்சாளர்கள் எந்தப் பொருள் பற்றி அந்தக் கூட்டங்களில் பேசுவது என்பதற்கான விவரங்களை – 90 வயதுக்கு மேலான நான் – அன்றாடம் காலை உணவை 11 மணி அளவில் அருந்துகின்ற அளவிற்கு – காலையில் அமர்ந்து எழுதுகின்ற "உடன்பிறப்பு" கடிதங்களின் மூலமாகவும், "கேள்வி–பதில்கள்" மூலமாகவும் தெரிந்து கொண்டிருக்கலாம். கழகப் பேச்சாளர்கள், ஏன் குறிப்பாக நம்முடைய துணைப் பொதுச்செயலாளர் துரை முருகன் உட்பட பலர் அன்றாடம் என் கடிதங்களிலே உள்ள கருத்துகளை, பொதுக் கூட்டங்களில் பேசுவதற்கேற்ப இரவில் குறிப்பெடுத்து வைத்துக் கொள்வதாகவும், அது கூட்டங்களில் பேசுவதற்கு மிகவும் உதவிகரமாக இருப்பதாகவும் என்னிடம் கூறியிருக்கிறார்கள்.

தற்போது அரசியலில் மிகவும் பரபரப்பான செய்தியாக வெளி வந்துகொண்டிருப்பது முதலமைச்சர் ஜெயலலிதா மீதான 66 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட சொத்துக் குவிப்பு வழக்கு பற்றியதாகும். அந்த வழக்கு 1997ஆம் ஆண்டிலிருந்து 16 ஆண்டுக் காலமாக நடைபெற்று வருகிறது. உச்ச நீதிமன்றத்திலும், பெங்களூரில் உள்ள சிறப்பு நீதிமன்றத்திலும், கர்நாடக மாநில உயர் நீதி மன்றத்திலும் என்று இந்த வழக்கு விசாரிக்கப்பட்டு வருகிறது. இதுவரை நூறு முறைகளுக்கு மேல் அந்த வழக்கில் குற்றம் சாற்றப்பட்டவர்கள் வாய்தா

வாங்கியிருக்கிறார்கள். ஆனால் தற்போது உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று அந்த வழக்கினை விசாரிக்கும் குறிப்பிட்ட நீதிபதிதான் இந்த வழக்கு முடியும் வரை நீடிக்க வேண்டும் என்றும், தங்களுக்கு எதிராக வாதாடுவதற்காக கர்நாடக அரசால் நியமிக்கப்பட்டுள்ள அரசு வழக்கறிஞரும், தற்போது உள்ளவர்தான் நீடிக்க வேண்டு மென்றும் முறையிடுகிறார்கள் என்றால், அதிலே உள்ள சூட்சமத்தையும், சுயநல உள்நோக்கத்தையும் கிராமங்கள் தோறும் மக்களிடையே எடுத்து விளக்கிப் புரிய வைத்திட வேண்டிய முக்கியக் கடமை உனக்கு உள்ளது. அதுபற்றி நான் 14.9.2013 தேதிய "முரசொலி"யில் இரண்டு பக்கங்களுக்கு மேல் எழுதினேன். ஆனால் அதிலே உள்ள கருத்துகள் தமிழகத்தில் வெளிவரும் தமிழ், ஆங்கில ஏடுகள் அனைத்திலும் இருட்டடிப்புச் செய்யப்பட்டுவிட்டன. அப்படியே வெளியிட்டாலும் ஒரு பத்தி, இரண்டு பத்திக்கு மேல் போவதில்லை. அரசுக்கு எதிரான செய்திகளையோ, ஜெயலலிதாவுக்கு எதிரான விமர்சனங்களையோ வெளியிட்டால் அந்தப் பத்திரிகைகளுக்கு முழுப் பக்க விளம்பரங்கள், அரைப் பக்க விளம்பரங்கள் கிடைக்காது. தற்போதெல்லாம் பத்திரிகைகளுக்கு, அவைகள் விற்கப்பட்டு வருகின்ற வருவாயைவிட, அரசு விளம்பரங்கள் மூலமாகத்தான் அதிக வருவாய் வருகின்றதாம். எனவே "பத்திரிகாதர்மம்" என்பதையெல்லாம் சற்று ஒதுக்கி ஓரங்கட்டி வைத்துவிட்டு, ஜனநாயக ரீதியாக ஆற்றிட

வேண்டிய கடமையை மறந்து, "வருமானம்" ஈட்டுவதிலே கவனம் செலுத்தி வருகிறார்கள். கழகத்தைப் பொறுத்தவரை நாம் இந்த ஏடுகளை நம்பி இயக்கம் நடத்துபவர்கள் அல்ல. பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலேயே "இந்து" நாளிதழ் "அண்ணா அவர்களும் அந்தக் கூட்டத்திலே பேசினார்" என்று வெளியிட்டது உண்டு. அதையெல்லாம் மீறித்தான் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தது. கழகப் பேச்சாளர்கள், ஏடுகள் ஆற்ற வேண்டிய பணியைத் தாமே எடுத்துக் கொண்டு, நாட்டு நடப்பு களை மக்களுக்குக் கொண்டு போய்ச் சேர்த்தார்கள்.

என்னுடைய கருத்துகளை தமிழக ஏடுகள் புறக்கணித்த காரணத்தால், அந்தச் செய்தி தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரியாமலே போய்விட்டதா? ஏடுகளிலே அந்தச் செய்தி வெளிவரவில்லை என்றதும், "முரசொலி"யில் சொத்துக் குவிப்பு வழக்கு பற்றி நான் எழுதிய கடிதத்தை கழக உடன்பிறப்புகள் ஆங்காங்கு துண்டு நோட்டீஸ்களாக அச்சடித்து விநியோகிக்க வேண்டுமென்று நான்கு வரிகள் வந்ததுதான் தாமதம், மறுநாள் முதல் மாவட்டக் கழகச் செயலாளர்கள், கழக முன்னணியினர் தங்கள் முயற்சியின் காரணமாக தங்கள் மாவட்டத்தில் எத்தனை ஆயிரம் துண்டுப் பிரசுரங்களை அச்சடித்து மக்களிடம் விநியோகித்தோம் என்று ஆர்வத்தோடு பட்டியல் அனுப்பத் தொடங்கினார்கள். இளைஞர் அணியினரோ ஒரு படி மேலே போய், துண்டு

நோட்டீஸ்களைக் கையிலே ஏந்தி ஆங்காங்கு பேருந்துகளிலே ஏறிக் கொண்டு அதிலே பயணம் செய்தவர்களுக்கெல்லாம் விநியோகித்த காட்சியை நீங்களே ஏடுகள் வாயிலாகக் கண்டிருப்பீர்கள். எனவே திருமண வீட்டில் சீப்பை எடுத்து ஒளித்து வைத்துக் கொள்வதைப்போல என்னுடைய கடிதத்தை ஆட்சி யாளர்களுக்குப் பயந்து கொண்டு இருட்டடிப்புச் செய்தவர்கள் எல்லாம் ஏமாந்துதான் போனார்கள்! தெருமுனைப் பிரச்சாரத்தில் ஈடுபடவிருக்கும் பேச்சாளர்கள், அந்தத் துண்டுநோட்டீசில் இடம் பெற்றுள்ள கருத்துக்களை பொதுமக்களிடம் விளக்கிக் கூறிட வேண்டும்.

அடுத்து, தற்போது தமிழகத்திலே அன்றாடம் கேள்விக் குறியாக உள்ள பிரச்சினையான சட்டம், ஒழுங்கு சீர்குலைந்து கிடப்பதைப் பற்றி மக்களுக்கு விளக்கிட வேண்டும். "கொலைப் பயத்தின் கோரப்பிடியில் தமிழகம்" என்ற தலைப்பில், தற்போது தமிழகத்தில் உள்ள சட்டம், ஒழுங்குப் பிரச்சினை பற்றி பல்வேறு நாளேடுகளிலும், வார இதழ்களிலும் வெளிவந்த கருத்துகளையெல்லாம் தேடிப் பிடித்து தொகுத்துத் தந்துள்ளேன். அந்தக் கருத்துகளை யெல்லாம் பொதுமக்கள் நன்றாகப் புரிந்து கொள்ளும் விதமாக, என்னென்ன ஏடுகள் இந்த ஆட்சியைப் பற்றி எவ்வாறு விமர்சனம் செய்துள்ளன என்பதை யெல்லாம் நீங்கள் படித்துக் காட்டிட வேண்டும்.

காவல் துறையினருக்காக கட்டப்பட்ட கட்டிடங்கள் திறக்கப்படாமல் அந்தக் காவல் நிலையங்கள் எவ்வாறு பாழடைந்த கட்டிடங்களிலே இயங்கி வந்தன என்பதை யெல்லாம் ஆதாரத்தோடு குறிப்பிட்டு 6–9–2013 அன்று நான் உடன்பிறப்பு மடல் எழுதியிருந்தேன். அதற்குப் பிறகுதான் அவசர அவசரமாக முதலமைச்சரிடம் அதிகாரிகள், "கருணாநிதி முரசொலியில் இவ்வாறு உண்மைகளையெல்லாம் பட்டவர்த்தனமாக எழுதிவிட்டார், இனியாவது ஐந்து நிமிடம் நேரம் கொடுங்கள்" என்று கெஞ்சி முதல்வரிடம் நேரம் பெற்று, கட்டி முடிக்கப்பட்டு நீண்ட காலமாகத் திறக்கப்படாமல் உள்ள காவல் நிலையங்களை யெல்லாம் முதலமைச்சர் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்து, அந்தச் செய்தியை தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் பக்கம் பக்கமாக வெளியிட்டன. எந்தப் பத்திரிகையும், முதலமைச்சரால் திறக்கப்பட்ட காவல் நிலையக் கட்டிடம் பற்றி கருணாநிதி குற்றம் சாற்றியிருந்தார், அதற்குப் பிறகுதான் முதலமைச்சர் நேரம் ஒதுக்கி அதைத் திறந்து வைத்தார் என்று குறிப்பிடவே இல்லை. இந்தச் செய்திகளையெல்லாம் நீங்கள் மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டும்.

ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் என்று கூறப்பட்டு, பல கோடி ரூபாய்ச் செலவில் திருமணம் செய்து வைக்கப்பட்ட சுதாகரன், பிறகு அ.தி.மு.க. ஆட்சியில் கைது செய்யப்பட்டது பற்றியும், 2001ஆம் ஆண்டு முதல்

12 ஆண்டுகளாக அவர் மீது வழக்கு நடைபெற்று தற்போது அளிக்கப்பட்ட தீர்ப்பு பற்றியும், தீர்ப்பை வழங்கிய நீதிபதி என்ன சொன்னார் என்பது பற்றியும் 20ஆம் தேதிய கேள்வி பதில் பகுதியில் விரிவாகத் தெரிவித்துள்ளேன். எவ்வாறு இந்த ஆட்சியில் பிடிக்காதவர்களை அலைக்கழிக்க வேண்டும் என்பதற்காகவும், காழ்ப்புணர்ச்சி யோடும் வழக்குப் போடப்படுகிறது என்பதற்கு நல்லதொரு விளக்கமாக அது அமையும்.

கச்சத் தீவு பிரச்சினை பற்றியும், விவசாயிகள் பிரச்சினை பற்றியும் 12.9.2013 அன்று கேள்வி–பதில்கள் பகுதியிலே எழுதியிருக்கிறேன். அதே நாளில் தஞ்சை நகராட்சி சார்பாக ஏற்கனவே செய்து முடிக்கப்பட்ட ஒரு பணிக்கு "டெண்டர்" விடப்பட்ட வினோதம் பற்றியும், தேனியில் பேருந்து நிலையம் ஒன்று கட்டி முடிக்கப்பட்டு அ.தி.மு.க. வினர் அதன் திறப்பு விழாவிற்கு முட்டுக்கட்டை போட்டு வருவது பற்றியும் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன்.

தி.மு. கழக ஆட்சியில் மகளிர்க்காக எத்தகைய மகத்தான திட்டங்கள் எல்லாம் தீட்டப்பட்டன என்ற விவரத்தை சற்று விரிவாகவே 8.9.2013 தேதிய முரசொலியில் தெரிவித்திருக்கிறேன். அ.தி.மு.க. அமைச்சர்கள் சிலர் கழக ஆட்சியில் மகளிர்க்காக எதுவும் செய்யவில்லை என்பதைப்போல "ப்ளக்ஸ் போர்டு" வைத்ததோடு சரி! ஆனால் எப்படிப்பட்ட திட்டங்கள் எல்லாம் மகளிர்க்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும் கழக

ஆட்சியில் நிறைவேற்றப்பட்டன என்பதையெல்லாம் தெரிவித்திருக்கிறேன். அவற்றைப் பற்றியும் தெருமுனைப் பிரச்சாரங்களில் கோடிட்டுக் காட்ட வேண்டும். அதேநேரத்தில் கடந்த சில நாட்களாக மாற்றுத் திறனாளிகள் இந்த ஆட்சியில் எந்த அளவிற்குப் போராடுகிறார்கள் என்பதையும், அவர்களைக் கைது செய்யும் காவல் துறையினர் எவ்வாறு அந்த மாற்றுத் திறனாளிகளைக் கொடுமைப் படுத்துகிறார்கள் என்பதையும் விளக்கிக் கூறத் தவறக் கூடாது.

அ.தி.மு.க. ஆட்சியில் மின் வெட்டு நிலைமை எவ்வாறு உள்ளது என்பதைப் பற்றியும், ஆட்சிப் பொறுப்பேற்ற போது மூன்றே மாதங்களில் மின்வெட்டினைச் சரி செய்வோம் என்று சவால் விட்டவர்கள், மூன்றாண்டுகள் முடிகின்ற நிலையிலும் மின்வெட்டுப் பிரச்சினையைத் தீர்க்காமல் இருப்பதைப் பற்றியும் நினைவுபடுத்திட வேண்டும். ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் கழக ஆட்சியில் எவ்வாறு விரைவுபடுத்தப்பட்டு வந்தது, தற்போது திட்டம் முழுமை அடையாத நிலையில் எந்த அளவிற்கு விளம்பரம் செய்யப்பட்டு அவசர அவசரமாகத் திறந்து வைக்கப்பட்டது என்பதையெல்லாம் 6.9.2013 அன்று முரசொலியில் எழுதியிருக்கிறேன்.

அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, அதற்கு முன்பு மக்கள் நலனுக்காகவும், மாநிலத்தின் மேம்பாட்டுக்காகவும் தி.மு.கழக ஆட்சியில்

நிறைவேற்றப்பட்ட முக்கியத் திட்டங்களையெல்லாம் முடக்கிப் போடுவதற்காக என்னென்ன முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது என்பதையும் தெருமுனைப் பிரச்சாரங்களில் சுட்டிக்காட்டத் தவறக் கூடாது. குறிப்பாக தலைமைச் செயலகத்திற்காக தி.மு.கழக ஆட்சியில் 600 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்து கட்டப்பட்ட கட்டிடம் மூன்றாண்டு காலமாக மூடப்பட்டுக் கிடப்பதையும், மதுரவாயல் – துறைமுகம் உயர் மட்டப் பறக்கும் சாலைத் திட்டத்தின் கதி என்ன என்பதையும், சேது திட்டம் கூடாது என்று நீதிமன்றம் வரை இந்த அரசு சென்றிருப்பதைப் பற்றியும் இந்தப் பிரச்சாரங்களில் தவறாமல் விளக்கிட வேண்டும்.

இப்படி எழுதிக் கொண்டே போகலாம்! ஆட்சியின் அவலங்களையெல்லாம் மறைப்பதற்காகவும், நாளேடுகள் அவற்றை வெளியிட்டுவிடக் கூடாது என்பதற்காகவும் ஒருவார காலத்தில் ஏடுகளுக்காக அ.தி.மு.க. ஆட்சியில் தரப்பட்ட முழுப்பக்க விளம்பரங்கள் எத்தனை என்பதையும், ஒவ்வொரு நாளிதழுக்கும் அந்த ஒருவார கால விளம்பரத் திற்காக அரசு அளித்த விளம்பரக் கட்டணம் எவ்வளவு என்பதையும் மிகவும் தெளிவாக எழுதி, அந்தப் புள்ளி விவரங்கள் தவறு என்றால், ஆட்சியினர் மறுப்பு வெளியிடட்டும், அதை ஏற்றுக் கொள்கிறேன் என்று செப்டம்பர் 1ஆம் தேதியே எழுதியிருந்தேன். இதுநாள் வரை அதற்கு எந்தப் பதிலும் ஆட்சியினர் தரவில்லை.

தி.மு.க. அறக்கட்டளை
பொதுநூலகத் துறை
சென்னை - 600 108

ஆறாக எதிர்க்கட்சியினர் மீது "அவதூறு வழக்கு"களைத் தொடுத்தே காலத்தைக் கழித்துவிட எண்ணுகிறார்கள். இனியெல்லாம் இந்த ஒரு வார காலம் தெருமுனைப் பிரச்சாரங்களில் ஈடுபடுவோர் எடுத்து விளக்கிடத் தவறக்கூடாது.

வெறும் வாய் ஜாலத்தாலும், வெற்று அறிக்கைகளாலும், பக்கம் பக்கமாக வெளியிடும் விளம்பரங்களாலும் மக்களை மயங்க வைத்து, ஏதோ தமிழக முன்னேற்றத்திற்கு அடுக்கடுக்கான காரியங்கள் நடைபெற்று வருவதைப் போல நம்ப வைத்துக் குளிர் காயலாம் என்று அ.தி.மு.க. ஆட்சியினர் மனப்பால் குடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை சான்றுகளுடன் ஊர்கள்தோறும், தெருக்கள்தோறும், வீடுகள்தோறும் எடுத்து விளக்கிட வேண்டிய பொறுப்பை முழுமையாக நிறைவேற்றிட வேண்டும். என் தம்பி, தங்கைகளாம் நீவிர் நிறைவேற்றிடுவீர்கள் எனும் நம்பிக்கை எனக்கு நிரம்ப உண்டு. நீவிர், வீட்டுக்கு விளக்குகள் அல்லவா; நாட்டுக்குத் தொண்டர்கள் அல்லவா?

"முரசொலி"
24–9–2013.

அன்புள்ள,
மு.க.

38036
கஅ328.54-11
கணஎத



வெளியீடு :

தி.மு.க. இளைஞர் அணி